வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 20/=




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 22.07.2021 வியாழக்கிழமை | இதழ் : 231 | பக்கங்கள் : 16

## பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த 3 முன்மொழிவுகள்

### ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு, ஜூலை 22

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண் டும் என்ற கருத்துடன் உடன்படாத ஜனாதிபதி ஆணைக்குழு, பயங்கரவாதத் தடுப் புச் சட்டத்தை கூடிய ஜனநாயக முறையில் அமுல்படுத்துவது தொடர்பான மூன்று முன்மொழிவு களை, இடைக்கால அறிக்கை ஊடாக முன்வைத்துள்ளது.

15

## அடங்க மறுக்கும் 'கொரோனா' மேலும் தீவிரமடையும் 'டெல்டா'

### மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை தொடர்ந்தும் நீடிப்பு என்கிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, ஜூலை 22

"இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, கொரோனாவின் திரிபு வைரஸான 'டெல்டா'வும் கொழும்பில் மேலும் தீவிரமடைகின்றது. நாள் தோறும் கொரோனாத் தொற்றாளர்களுடன் 'டெல்டா' தொற்றாளர்களும் அடை யாளம் காணப்பட்டு வருகின்றனர்."

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலை யத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்லா நேற்று தெரிவித்தார்.

15

## 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று வரும்

கொழும்பு, ஜூலை 22

சினோபார்ம் தடுப்பூசியின் மேலும் 20 இலட்சம் டோஸ்கள் நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்

15

## 2032 ஒலிம்பிக் பிரிஸ்பேனில்

ரோக்கியோ, ஜூலை 22

2032ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டிகள் அவுஸ்ரேலியா வின் பிரிஸ்பேன் நகரில் நடை பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

1956 இல் மெல்

15

## கிளிநொச்சி சந்தையில் எழுவருக்கு கொரோனா!

கிளிநொச்சி, ஜூலை 22

கிளிநொச்சி மாவட்டம் சேவைச் சந்தையில் கடந்த இரு தினங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 07 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 317 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனை

15

### இரு நாள் பயணம் மேற்கொண்டு

## யாழ். வரும் பிரதமர் மஹிந்த பல நிகழ்வுகளில் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

நூறு நகரங்கள் திட்டத்தின் இரண்டாம் கட் டப் பணிகளை ஆரம்பிக்கும் தேசிய நிகழ்வு அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந் துரைக்கு அமைய வேலணையில் நடைபெறவுள்ளது

எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஜீலை 31 மற்றும் ஆகஸ்ட்

15

## யாழ். மாவட்ட அரச அதிபருடன் நேற்று இராணுவ கட்டளை தளபதி சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு, யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசனை நேற்று நேரில் சந்தித்தார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்ட ளைத் தளபதியாக

15

## அரசுக்கு எதிராக 14 தொழிற்சங்கங்கள் இரத்தினபுரியில் மாபெரும் போராட்டம்

இரத்தினபுரி, ஜூலை 22

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் உட்பட 14 தொழிற்சங் கங்கள் ஒன்றிணைந்து இரத் தினபுரி நகரில் நேற்று அரசுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டன.

சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல் கலைக்கழக சட்ட மூலத்தை மீளப் பெறு

15

## தொடரும் கொரோனா பலி மேலும் 47 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்

15

## நான்காவது அலையின் விளிம்பில் நாடு இல்லை

### சுகாதார அமைச்சு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 22

இலங்கை கொரோனா வைரஸின் நான்காவது அலையை எதிர்கொள்ளும் விளிம்பில் உள்ளதென என கூறுவதற்கு இப்போது எந்த அடையாளமும் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் நான்காவது அலையின் முதல் கட்டத்தை நோக்கி நாடு சென்றுகொண் டிருக்கிறது என்றும் பயணக் கட்டுப்பாடு கள் இருந்தபோதிலும்

15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியத் தலைவர்களுக்கு இப்போது சிறீ லங்கா தேச பக்தி அதிகரித்துவிட்டது என்று நண்பர் ஒருவர் தெரிவித்தபோது எனக்கு ஒன்றும் புரிய வில்லை. எதைச் சொல்கிறார் என்பதும் புரியவில்லை.

விவரமாகச் சொன்னால்தானே புரிவதற்கு என்ற போதுதான் சொன்னார், ராஜபக்ஷ அரசு நாட்டை இராணுவ மயப்படுத்துகின்றது, பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று இலங்கையின் தேசிய நலனில் இப்போது நமது தமிழ்த் தேசியத் தலைவர்கள் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டனர் கவனிக்கவில்லையோ என்றார் விளக்கமாக.

அண்மையில் கரு ஜெயசூரிய கூட்டியிருந்த கூட்டத்திற்கு நமது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேரில் போனார்கள், அல்லது வாழ்த்துச் செய்தி அனுப்பினார்களே, அதனைத்தான் நண்பர் குறிப்பிடுகின்றார் என்பது புரிந்தது.

அரசாங்கம் தனது செல்வாக்கை இழந்துவருகின்றது என்பது எவ்வளவு உண்மையோ அதேவேளை, இந்த அரசாங்கமே திடீரென்று மக்களால் தூக்கிக் கொண்டாடப்படும் நிலைக்கும் வரலாம்.

மஹிந்தர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்று நள்ளிரவில் வீட்டுக்கு சென்றபோது இப்படி திரும்பி வருவார் என்று யாரும் நினைத்திருக்கமாட்டார்கள்.

அதேபோலத்தான் இன்று இறங்குமுகத்தில் இருக்கும் இந்த அரசாங்கத்தால் எந்த வேளையிலும் நிலைமையை மாற்றவும் முடியும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்த போது இன்னும் சில தசாப்தங்களுக்கு அவர்களை வீழ்த்த முடியாது என்றே பலரும் நம்பினார்கள்.

ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. அடுத்த தேர்தலில் ராஜபக்ஷக்களை சுலபமாக வீழ்த்த முடியும் என்று கணக்குப்போடும் எதிர்க்கட்சி கள் அதற்கான ஆயத்த வேலைகளைத் தொடங்கி விட்டன.

இன்று எதிரணிக்கு தலைமை தாங்குவது என்னவோ சஜித் பிரேமதாஸதான். ஆனால், ஒரு தடவை ராஜபக்ஷக்களை வெற்றிபெறமுடியாத ஒரு தலைவரை நம்பி மீண்டும் ஒருதடவை பரீட்சித்துப் பார்க்க எதிர்க்கட்சியிலுள்ள பல கட்சிகள் தயாராக இல்லை.

இந்நிலையில் தேர்தல் என்று வரும்போது மீண்டும் பொதுவேட்பாளர் என்ற கோஷம் எழலாம். அவ்வாறு வரும்போது அந்த 'ரேசில்' கலந்துகொள்ள காத்திருப்பவர்களில் முன்னாள் சபாநாயகர் கரு ஜெய சூரியவும் ஒருவர்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு பட்ட பின்னர் எந்த அணியிலும் சேராமல் தனித்த வில் அடித்துக்கொண்டிருப்பவர் அவர்.

அவருக்கு தனது தலைமையை புதுப்பித்து எதிரணியை ஒன்றுதிரட்டி அரசியலை நகர்த்த வேண்டியதேவை இருக்கின்றது.

ஆனால், அந்த அரசியலில் நாமும் தலையை நுழைக்கவேண்டுமா என்பது தெரியவில்லை.

இப்படித்தானே, ராஜபக்ஷக்களை வீழ்த்துவதற்காக மைத்திரியை கொண்டுவந்தோம். கொண்டுவந்த சில வருடங்களிலேயே அவரை நாய்களோடு ஒப்பிட்டுப் பேச வைத்தாரே. ஐந்து ஆண்டுகள் நாம் அந்த நல்லாட்சி அரசின் பின்னால் கைகோத்து நடந்து எதைச் சாதித்துக்காட்டினோம் என்பதை இரைமீட்க வேண்டாமா?

இப்போது மீண்டும் அதே கோஷத்துடன் புறப்படத் தயாராகிறோமே இதனால் நமக்கு என்ன நன்மை.

எம்மைப் பொறுத்தவரை, ஆயுதப் போராட்டம் நடந்தபோது நாம் சண்டையிட்டு நாட்டைப் பிரிக்க முயன்றோம். அதில் தோற்றுவிட்டது வேறு சங்கதி.

ஆனால், இப்போது, பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வு என்பது நாட்டை ஆளுகின்றவர்களுடன் சேர்ந்தே பெறவேண்டியது.

அதனை ஆட்சியாளர்களுடன் பேசியே பெற வேண்டும். அது ராஜபக்ஷவாக இருந்தால் என்ன, பிரேமதாஸக்களாக இருந்தாலென்ன, ஜெயசூரியக்களாக இருந்தாலென்ன. அவர்களுடன் பேசியே தீர்வைப் பெறவேண்டும். எதிரணியில் இணைந்து பணியாற்ற முன்னர் நமது பிரச்னைக்கு தீர்வை பகிரங்கமாக முன்வைக்கமுடியாத தலைவர்களை நம்பி நமது கதையை தொடர்கதையாக எழுதிக் கொண்டிருக்கப் போகின்றோமா?

- ஊர்க்குருவி

# கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை வார இறுதியில் விதிக்கும் திட்டமில்லை

கொழும்பு, ஜூலை 22

வார இறுதி நாள்களில் நீண்ட விடுமுறை உள்ள போதிலும் நாட்டில் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க எந்த திட்டமும் இல்லை என்று கொவிட்- 19 பரவு



வதைத் தடுப்பதற்கான தேசிய செயலணியின் தலைவர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள மாகாண பயணக் கட்டுப்பாடுகள் மட்டுமே இன்னும் நடைமுறையில் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட்-19 மற்றொரு கொத்தணியைத் தீர்மானிப்பதில் வரவிருக்கும் வார இறுதி விடுமுறை நாள்கள் தீர்க்கமானதாக இருக்கும் என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே இராணுவத் தளபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, மாகாண போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறி மேல் மாகாணத்தில் இருந்து வெளியேற முயன்ற 261 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வார இறுதி நாள்களில் அனைத்து மாகாண எல்லைகளிலும் சோதனைச் சாவடிகளை அமைத்து சிறப்பு பொலிஸ் குழுக்கள் நிறுத்தப் படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## சு.க தலைமையகத்தில் திருடியவர் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 22

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி சாதனத்துக்கான செப்புக் கம்பிகளை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு- 10 பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைதானவர் போதைக்கு அடிமையானவர் என்றும், திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நீர்வீழ்ச்சியில் விழுந்த யுவதியைத் தேடும் பணிகளில் தாமதம்

பத்தனை, டெவோன் நீர்வீழ்ச்சியில் தவறி வீழ்ந்து காணாமல் போன யுவதியை தேடும் பணிகள் தாமதமாகியுள்ளன. டெவோன் நீர்வீழ்ச்சியில் நீரின் வேகம் அதிகரித்துள்ள காரணத்தினால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது.

இராணுவத்துடன், பிரதேச மக்களும் இணைந்து யுவதியை தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். நீர்வீழ்ச்சியில் வழமையை விட நீர் அதிகரித்துள்ளதால், தேடுதல் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், மூன்றாவது நாளாக நேற்றும் தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் கூறினர்.

### கல்வி TV CHANNEL-1 — 22.07.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 22.07.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 22.07.2021 வியாழக்கிழமை

பிலவ வருடம், ஆடி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# எரிமலை எப்போதும் வெடிக்கலாம்?

இலங்கை அரசாங்கம் மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவிடமிருந்து பெறுவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருப்பதாக நிதியமைச்சின் செய்திகள் கூறுகின்றன. நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பு மோசமான நிலையில் இருப்பதால், அதனை சரிசெய்வதற்கு மீண்டும் சீனாவிடம் செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நாடு தற்போதிருக்கின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்னும் அபிப்பிராயத்தை அண்மையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அவ்வாறான ஓர் அபிப்பிராயத்தை வேறு சிலரும் முன்வைத்திருந்தனர். ஆனால், அரசாங்கம் அதில் தயக்கம் காண்பித்து வருகின்றது. அதன் பின்னணி என்ன என்பதில் தெளிவில்லை.

சீனாவிடம் கடன் பெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்னும் அடிப்படையில்தான், இவ்வாறான அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒருவேளை ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருந்திருந்தால், அவர் நிச்சயம் சர்வதேச நாணய நிதியத்திடம்தான் சென்றிருப்பார். சர்வதேச நாணய நிதியம் என்பது மேற்குலகின் ஆளுகைக்குள், குறிப்பாக அமெரிக்க ஆதிபத்தியத்தின் கீழ் இருக்கின்ற சர்வதேச நிதி அமைப்பாகும். அடிப்படையில் உலக தாராளவாத கட்டமைப்புக்களை தாங்கிநிற்கும் தூண்களில் ஒன்று.

ஆனால், சீனாவிடமிருந்து ஒரு நாடு அதிகம் கடன்களை பெறுகின்றபோது, உலக தாராளவாத கட்டமைப்புக்களிலிருந்து அந்த நாடு அதிகம் விலகிச் செல்ல நேரிடும். ரணில் விக்கிரமசிங்க அடிப்படையிலேயே தாராளவாத அரசியல் சிந்தனைகளால் வழிநடத்தபடும் ஒருவர். ஆனால், தற்போதைய அரசாங்கமோ, எப்போதும் முதல் தெரிவாக சீனாவையே கருத்தில் கொள்கின்றது. பஸில் ராஜபக்ஷ இந்த நிலைமையில் சில மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என்று கணிக்கப்பட்ட போதிலும்கூட, நிலைமைகளில் பெரியளவில் மாற்றங்கள் தென்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் 43 படையணியின் தலைவருமான சம்பிக்க ரணவக்க, நாடு வரலாற்றில் முதல் முறையாக வங்குரோத்து நிலையை எதிர்கொண்டிருப்பதாக தெரிவித்திருக்கின்றார். இது எவ்வாறான நிலைமைகளை ஏற்படுத்தும் என்பதற்கான அனுபவம் இலங்கைக்கு இல்லை. ஏனெனில், இது போன்ற நிலைமை முன்னர் ஏற்பட்டதில்லை. சம்பிக்க போன்ற அரசியல்வாதிகள் இவ்வாறு கூறுவதற்கு அப்பால், இலங்கையின் பிரபலமான பொருளாதார நிபுணர்களும் நாட்டின் இன்றைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் எச்சரிக்கின்றனர். நிலைமை கட்டுப்பாட்டை தாண்டி சென்றுகொண்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

சீனாவிடமிருந்து பெறும் கடன்கள் அதிகரிக்கும் போது, இலங்கையின் மீதான சீனாவின் பிடியும் மேலும் இறுக்கமடையும். இது இலங்கையை மேலும் உலகளாவிய அதிகாரப் போட்டிக்குள் இழுத்துச் செல்லலாம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கன்னி உரையின் போது, இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அதாவது, "நாங்கள் ஒரு சிறிய நாடு. உலகின் அதிகாரப் போட்டிக்குள் நாங்கள் வரவிரும்பவில்லை. நாம் ஒரு நடுநிலையான வெளிவிவகார கொள்கையைப் பின்பற்ற விரும்புகின்றோம்." ஆனால், சீனாவின் பிடி, இலங்கைக்குள் வலுவடைந்து செல்வதானது இலங்கையை நிச்சயம் அதிகாரப் போட்டிக்குள் கொண்டு சேர்க்கும். இதுதான் முன்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தன விடயத்திலும் நடந்தது.

இலங்கையின் எதிர்காலத்தை இப்போதைக்கு ஊகிப்பது கடினம். ஆனால், இப்போதுள்ள நிலைமையை உற்று நோக்கினால், 1973இல், சிறிமாவோ பண்டாரநாயக்க கூறிய ஒரு விடயம்தான் நினைவுக்கு வருகின்றது. நாடு எரிமலையின்மீது அமர்ந்திருக்கின்றது. எரிமலை எந்த நேரத்திலும் வெடிக்கலாம்.

# அருட்தந்தை மா.சக்திவேலின் காலமறிந்த கரிசனை !

**- அலசுவது இராஜதந்திரி -**

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் , விடுதலையாகும் தமிழ் அரசியல் கைதிகளை சமூகத்தில் ஒன்றிணைத்து அவர்களின் மறுவாழ்வுக்கு சிறந்த பொருளாதார பின்னணியுடன் உதவக்கூடிய செயல்திட்டம் எதுவும் இல்லை என்று தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

அருட்தந்தை மா.சக்திவேலின் கவலை மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கின்றது. வடக்கு-கிழக்கில் மூன்று தசாப்த கால குழப்பகரமான சூழலில் யுத்தத்தில் குதித்து தமது இளமையை இழந்தவர்களாகவும், உற்றார், உறவுகளின் தொடர்புகளை இழந்தவர்களாகவும், தமக்கிருக்கக்கூடிய சொத்து, சுகங்களை பறிகொடுத்தவர்களாகவும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு மீளவும் சமூகத்தில் இணைந்துள்ள இளைஞர், யுவதிகள் காணப்படுகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தற்போது குரல் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், தமது இனத்தின் சுயகௌரவத்துக்காகவும், அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவும் பலதரப்பட்ட தியாகங்களை மேற்கொண்ட இளைஞர், யுவதிகள் தற்போது தமது எதிர்கால வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு தாம் சார்ந்த சமூகத்தின் உதவி ஒத்தாசைகளை எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றனர்.

**வாழ்க்கை போராட்டம்**

தமிழ் அரசியல் கைதிகள் ஒருபுறமிருக்க, யுத்தத்தில் நேரடியாகவே பங்குபற்றி உடல் ஊனமுற்றவர்களாகவும், கண் பார்வையற்றோராகவும் தமிழ் இனைஞர், யுவதிகளில் அநேகர் காணப்படுகின்றனர்.

எனவே, உடல் உபாதைகளுக்குள்ளான முன்னாள் போராளிகளின் நிலையே பரிதாபகரமானதாக இருக்கின்றது. இவர்களில் சிலர் திருமணமாகி குடும்பஸ்தர்களாகவுமிருக்கின்றனர். இத்தகையோருக்கு உதவுவதற்கென ஒரு பலமான அமைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ள கருத்து வலியுறுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு - கிழக்கு புலம்பெயர் தமிழர்கள் உலகில் இன்று அனைத்து பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். உள்நாட்டு யுத்தங்களினால் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகளையும் சேர்ந்த மக்களும் பொருளாதார ரீதியாக வளம்பெற்ற நாடுகளில் புகலிடம் அடைந்துள்ளனர். ஆயினும், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் புகலிடம் தேடியுள்ளோர் தாம் ஈடுபட்டுள்ள துறைகளில் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களில் பலர் மிகவும் பணபலம் படைத்த தனவந்தர்களாகவும் இருக்கின்றனர்.

இவைதவிர நல்ல வருவாயை ஈட்டக்கூடிய வழிபாட்டுத்தலங்கள்கூட புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களால் தாம் வாழ்ந்து வருகின்ற நாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் புலம்பெயர்ந்த தமிழர்களால் யுத்தத்தினால் பாதிக்கப்பட் டுள்ள அரசியல் கைதிகள் மற்றும் முன்னாள் போராளிகள் என்போருக்கான உதவி, ஒத்தாசைகள் மிகக்குறைவாகவே காணப்படு கின்றன.

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பல்வேறு நிதி சேகரிக்கும் நிகழ்ச்சிகளும் வெளிநாடுகளில் நடத்தப்படுகின்றன. ஆனால், வெளிநாடு களில் சேர்க்கப்படுகின்ற நிதிகள் தகுந்த விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களை வந்தடைகின்றனவா என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

**நிதியை கையாளுவதில் முறைகேடுகள்**

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சேகரிக்கப்படுகின்ற நிதியை கையாளுவது தொடர்பில் பல முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யுத்தம் இடம்பெற்றபோது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டோரின் தேவைகளுக்கென புலம்பெயர்ந்த நாடுகள் பலவற்றிலும் விரிவான முறையில் நிதி சேகரிப்பு இடம்பெற்றிருந்தது.

ஆனால், தற்போது யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் வடக்கு-கிழக்கில் மனிதாபிமான பிரச்னைகள் பாரியளவில் தென்பட ஆரம்பித்துள்ளன.

இதனை கருத்தில் கொண்டே அருட்தந்தை மா. சக்திவேல் விடுதலையாகும் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வை கவனத்தில் கொண்டதான ஆக்கபூர்வமான வேலைத் திட்டமொன்றின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

**சுமந்திரன் கூறியது**


இதுவிடயத்தில் யுத்தம் இடம்பெற்ற காலகட்டங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பலதரப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைளில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது கரிசனையை வெளிப்படுத்தவேண்டியது அவசியமானதாகின்றது.

அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வடக்கு-கிழக்கு மக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசியைப்பெற்றுக்கொடுப்பதற்கு நிதி தேவைப்பட்டால் அதற்குரிய நிதியை வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து பெற்றுத்தர முடியுமென கூறியிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கூறியுள்ளமையை நோக்கும்போது உரிய அணுகுமுறைகளின் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவிகளை பெறக்கூடிய வாய்ப்புகள் இருப்பதையே அறிய முடிகின்றது.

எனவே, அருட்தந்தை மா.சக்திவேல் வெளிப்படுத்திய தமிழ் அரசியல் கைதிகளின் மறுவாழ்வு மற்றும் யுத்தத்தினால் நொந்து, நொடிந்து, ஊனமுற்றுள்ள வடக்கு - கிழக்கு மக்கள் குறித்த கரிசனையை கவனத்திலெடுத்து ஓர் அர்த்தமுள்ள புனர்வாழ்வு நடவடிக்கையை புலம்பெயர்ந்த தமிழர்களின் அனுசரணையோடு மேற்கொள்வதே காலத்தின் தேவையாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பணிச்சுமை குறையும். அதிகாரிகளால் அலைகழிக்கப்பட்ட நிலை மாறும். குடும்பத்தில் சிறு சண்டைகள் மறையும். பொறுமை தேவை. மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**இடபம்**
புதிய விஷயங்களை ஆர்வமுடன் கற்றுக் கொள்வீர்கள். நண்பர்களால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். சேமிப்பு உயரும். கணவன், மனைவிக்குள் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள்

**மிதுனம்**
விலகிச் சென்ற உறவினர்கள் உங்களை நாடி வருவார்கள். வராது என்று நீங்கள் கைவிட்ட பணம் தானாக வந்து சேரும். மனதுக்குப் பிடித்த விருந்தினர்களின் வருகையால் மகிழ்வீர்கள்.

**கடகம்**
புதிய தீர்மானம் மூலம் நிம்மதிக்கு வழிவகை செய்வீர்கள். மனநிறைவுடன் இருப்பீர்கள். திட்டமிட்ட பணிகளை முடிப்பீர்கள். விஷயங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. உடல் சோர்வு நீங்கும். மறைமுக விமர்சனம் எதிர்ப்பு வந்தாலும் பொறுமையால் வெல்வீர்கள். வாகன வகையில் செலவாகும். நண்பர்கள் உதவுவர்.

**கன்னி**
தாமதித்த பணிகளை இன்று முடிப்பீர்கள். உறவினால் நன்மை ஏற்படும். சமூக அந்தஸ்து உயரும். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். குடும்பத்தினரால் ஆறுதல் பெறுவீர்கள்.

**துலாம்**
அலைச்சலுடன் ஆதாயம் கிடைக்கும். விலகிச் சென்ற அக்கம்பக்கத்தினர் நெருங்கி வருவர். பிள்ளைகளால் நன்மையடைவீர்கள். குடும்பத்தினரிடம் பாராட்டு எதிர்பார்க்க வேண்டாம்.

**விருட்சிகம்**
தாழ்வு மனப்பான்மை நீங்கும். முயற்சியால் முன்னேற்றம் ஏற்படும். தெளிவாகப் பேசி உங்களைப் புரிய வைப்பீர்கள். உடல்நலம் மேம்படும். சவால்களை முயன்று முடிப்பீர்கள். நட்பு கிடைக்கும்.

**தனுசு**
பெரியவர்களின் அறிமுகத்தால் நன்மை.விடா முயற்சியால் வெல்வீர்கள். பணப் பற்றாக்குறை ஏற்படலாம். உறவினர்களின் உதவியை நாடுவீர்கள். மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி வரும்.

**மகரம்**
வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நிறைவேற்றுவீர்கள். உங்களுக்குப் போட்டியாக உள்ளவர்களின் எதிர்ப்பு நிலை மாறும். நீண்ட கால எதிர்பார்ப்பு நிறைவேறும். உடல்நிலை சீராகும்.

**கும்பம்**
முன்கோபத்தைக் கட்டுப்படுத்தி பிரச்னையிலிருந்து மீள்வீர்கள். உயர்வதற்கான வழிகளை யோசிப்பீர்கள். ஆன்மிக சிந்தனை. குடும்பத் தினர் ஒத்துழைப்பர். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்**
உங்களை நம்பி முக்கியப் பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பெரியவர்களின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளால் நன்மை உண்டு. திறமையை வெளிப்படுத்தி போட்டிகளை எதிர்கொள்வீர்கள்.

# மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் கல்விக்கான பாடப் புத்தகங்கள் தமிழில்

## தமிழ் நாடு பாடநூல் கழகத் தலைவர் ஐ.லியோனி




சென்னை, ஜூலை 22

மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்கல்விக்கான பாடப் புத்தகங்கள் தமிழில் அச்சிடும் பணி விரைவில் தொடங்க இருப்பதாகத் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் ஐ.லியோனி நேற்று தெரிவித்தார்.

திருவள்ளூரில் உள்ள தமிழ்நாடு பாடநூல் கழகப் புத்தகங்கள்வைக்கப்பட்டிருக்கும்கிடங்கை திண்டுக்கல் ஐ.லியோனி நேற்று ஆய்வு செய்தார். அப்போது, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

இதன்பின் செய்தியாளர்களைச் சந்தித்த ஐ.லியோனி, "தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து மாநிலம் முழுவதும் ஆய்வு மேற்கொண்டு வருகிறேன். திருவள்ளூர் கிடங்கிலிருந்து 860 பள்ளிகளுக்குப் புத்தகங்கள் அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 400 பள்ளிகளுக்குப் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது பாடநூல் கழகத்துக்கு முதல்வர் ஸ்டாலின் இன்னொரு பணியைக் கொடுத்திருக்கிறார். பொறியியல் மற்றும் மருத்துவத்தைத் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகங்களைத் தமிழில் அச்சிட்டுக் கொடுக்க வேண்டும் என்று முதல்வர் கூறியிருக்கிறார்.

இதை மிகப் பெரிய பொறுப்பாக எடுத்துக்கொண்டு, கிராமப்புற மாணவர்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் தாய்மொழியில் கல்லூரிக் கல்வியைப் படிக்கப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்படும். இதன்மூலம், 'தாய் மொழியில் உயர்கல்வி கற்றல்' என்ற பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் ஆகியோரது கனவை முதல்வர் நிறைவேற்றியுள்ளார். என்னுடைய பதவி என்பது நியமிக்கப்பட்ட பதவி என்பதால், என்னுடைய கலைப் பயணமும் தொடர்ந்து இருக்கும்" என்று கூறினார்.

# அ.தி.மு.க. கட்சிக் கொடியை பயன்படுத்த சசிகலாவுக்கு எந்த உரிமையும் இல்லை

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை, ஜூலை 22

அதிமுக கட்சி கொடியை பயன்படுத்த சசிகலாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

சசிகலா நேற்று முன்தினம் சென்னை அப்பலோ மருத்துவமனை சென்று அங்கு டாக்டர்களிடம் மதுசூதனன் உடல்நிலை குறித்து கேட்டறிந்தார். அப்போது அவரது காரில் அ.தி.மு.க. கொடி கட்டப்பட்டிருந்தது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் சென்னையில் செய்தியாளர்கள் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறுகையில், "மருத்துவமனையில் நோய்வாய்ப்பட்டிருந்த மதுசூதனனை சந்திப்பது என்பது ஒரு ஆரோக்கியமான விஷயம் தான். அது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் காரில் எப்படி அவர் அதிமுக கொடி கட்டி செல்லலாம்? அ.தி.மு.கவுக்கும் சசிகலாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சம்பந்தமில்லாமல் எப்படி அதிமுக கொடியை கட்டிக் கொண்டு செல்ல முடியும்.அ.தி.மு.க. கொடி கட்டுவதற்கு சசிகலாவிற்கு எந்த உரிமையும் இல்லை" எனத் தெரிவித்தார்.

# மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்த அ.தி.மு.க, அ.ம.மு.க .நிர்வாகிகள்

சென்னை, ஜூலை 22,

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ராமநாதபுரம், கன்னியாகுமரி உள்ளிட்ட ஏழு மாவட்டங்களை சேர்ந்த மாற்றுக்கட்சியினர் தங்களைத் தி.மு.கவில்இணைத்துக்கொண்டனர். சென்னை தேனாம்பேட்டையில்உள்ளகட்சியின்தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும், அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவருமான வ.து. நடராஜன், இவரது மகனும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் ராமநாதபுரம் மாவட்டச் செயலாளராக இருந்தவருமான வ.து.ந. ஆனந்த் ஆகிய இருவரும் தி.மு.கவில் இணைந்தனர். அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் ஒரத்தநாடு சேகர் என அ.ம.மு.கவின் பல்வேறு மாவட்ட நிர்வாகிகள் திமுகவில் இணைந்தனர்.



மேலும் சேலம், ஈரோடு, தருமபுரி, நாமக்கல், தஞ்சாவூர், ராமநாதபுரம், கன்னியாகுமரி என்று 7 மாவட்டங்களைச் சேர்ந்த 300க்கும்மேற்பட்ட மாற்றுக்கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர். புதிதாக இணைந்த மாற்று கட்சியினருக்கு புத்தகம் மற்றும் திமுக கரை வேட்டிகளை பரிசளித்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, பொன்முடி, மாவட்டச் செயலாளர் சுரேஷ்ராஜன், முன்னாள் எம்.எல்.ஏ., ஆஸ்டின் ஆகியோர் உடனிருந்தனர்.

# வடக்கு-கிழக்கில் தடுப்பூசி, வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு முன்னுரிமை

## அரச தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

**இலங்கையில் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தடுப்பூசி விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என இலங்கை தடுப்பூசிப் பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக தி இந்து தெரிவித்துள்ளது.**

அத்துடன், இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தி இந்து நேற்று வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

வடக்கில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேருக்கும் கிழக்கு மாகாணத்தில் 74 ஆயிரம் பேருக்கும் இதுவரை முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமூகத்தில் தடுப்பூசி போட்டுக்கொள்வது குறித்த தயக்கம் இன்னமும் உள்ளது என கிளிநொச்சியை தளமாகக் கொண்ட பெண்கள் அமைப்பின் தலைவர் சுரேஷ்குமார் உஷாநந்தினி தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகளைப் பற்றிய நம்பகமான தகவல்கள் எங்களுக்குத் தேவை. தடுப்பூசிகளைத் தவிர்க்க வேண்டியவர்கள் யார்? அதன் விளைவுகள் என்ன? என்பது குறித்த தகவல்களை சமூகத்துக்குக்கு எடுத்துச் செல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பணிகளில் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினரை அரசு பயன்படுத்தலாம் எனவும் அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கில் தடுப்பூசி முயற்சிகள் விரைவுபடுத்தப்படும் அதேவேளை, மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். தொற்றுநோய் தேசிய ரீதியில் பொருளாதார ரீதியாக கடும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளபோதும் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்கள் மோசமான பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். ஏற்கனவே ஒரு நீண்ட உள்நாட்டு யுத்தத்தின் பேரழிவுகளால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் கிட்டத்தட்ட 25 வீடமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன எனவும் கிளிநொச்சியை தளமாகக் கொண்ட பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

போரில் பாதிப்பட்டவர்களுக்கான உருப்படியான பொருளாதார ரீதியாக உதவித் திட்டங்களை அரசு முன்னெடுக்கவில்லை என வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரில் இருந்து தப்பிப் பிழைத்தவர்கள் மீண்டும் - மீண்டும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வடக்கு - கிழக்கில் பெரும் பாலான குடும்பங்கள் நுண் நிதிக் கடன் என்ற வலையில் சிக்கிக்கொண்டுள்ளன. இந்த நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கான திட்டங்களை முன்னாள் அரசு முன்வைத்தபோதும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு பகுதிகளில் வீட்டு வசதிகளின் தேவை அதிகரித்துள்ளது. உள்நாட்டில் இடம் பெயர்ந்த சுமார் 3,500 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளன . இராணுவத்தின் வசம் இருந்த மக்கள் நிலங்கள் குறிப்பிடத்தக்க அளவு விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆறு பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் சில ஆயிரம் ஏக்கர் அரசு மற்றும் தனியார் நிலங்கள் இன்னும் முப்படையினரிடம் ஆக்கிரமிப்பில் உள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் வீட்டுவசதி தேவைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்றி வருகிறோம். மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கான அரசாங்கத்தின் மீள்குடியேற்ற, வீட்டுத் திட்ட மற்றும் புனர்வாழ்வு ஒருங்கிணைப்பாளரான காசிலிங்கம் கீதநாத் கூறினார்.

வடக்கு - கிழக்கில் விவசாயம், மற்றும் கடற்றொழில் துறைகளை வலுவாக்குவது அரசாங்கத்தின் முன்னுரிமையாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் வடக்கு -கிழக்கில் மக்களின் வாழ்வாதாரத்துடன் பின்னிப் பிணைந்த நிலங்கள் இன்னமும் விடுவிக்கப்படாதுள்ளது சிக்கலாகவே உள்ளது என வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச நிர்வாக சேவையில் இருந்த மூத்த அதிகாரியான நாகலிங்கம் வேதநாயகன் கூறுகிறார்.

வட,கிழக்கின் பல பகுதிகளில் விவசாய நிலங்கள் உட்பட மக்களின் நிலங்கள் வன திணைக்களத்துக்கு உரியதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் மூலமே அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பலாலி விமான நிலையமும் காங்கேசன் துறைமுகமும் முழுமையான இயங்கு நிலைக்கு வரவேண்டும். முதலீடுகளை ஈர்க்கவும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் இவை முக்கியமானவை எனவும் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

அத்துடன், புலம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக தங்கியுள்ளவர்களில் திரும்பி வரக் காத்திருக்கும் குடும்பங்களை மீளக் குடியேற்ற அரசாங்கம் தெளிவான திட்டம் ஒன்றை வகுக்கவேண்டும். காணி மற்றும் வீடு உள்ளிட்ட வசிதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களை மீள அழைத்துவர முடியும் எனவும் வேதநாயகன் குறிப்பிட்டார்.






# ஹிசாலினிக்கு நீதி வேண்டி மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 22

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனின் வீட்டில் சிறுமி ஒருவர் தீ எரிகாயங்களுடன் மீட்கப்பட்டு உயிரிழந்தமை தொடர்பில் முறையான விசாரணையை வலியுறுத்தியும் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்தும் மட்டக்களப்பில் கவனஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் என்னும் அமைப்பினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு தாண்டவன் வெளி சந்தியில் குறித்த சிறுமியின் கொலைக்கு எதிரான கோசங்களைக் கொண்ட பல வேறு பதாகைகளையும் ஏந்திய வாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பறை மேளம் அடித்து உயிரிழந்த சிறுமிக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த போராட்டத்தில் தமிழ் - முஸ்லிம் பெண்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறுமியின் படுகொலைக்கு தமது எதிர்ப்பை தெரிவித்தனர். (அ)

# மேல்மாகாண கொவிட் தொற்றாளர்களில் 20 வீதமானோர் ஒட்சிசன் தேவையுள்ளோர்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் கொவிட் - 19 நோயாளர்களில், சுமார் 20 சதவீதமானோர் ஒட்சிசன் தேவையுடையவர்களாக உள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை, கொவிட்-19 வைரஸின் நான்காம் அலை உருவாவதற்கான ஆரம்பக் கட்டத்தை நெருங்கியுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# 80 ஆயிரம் தடுப்பூசிகள் வவுனியாவுக்கு வரும்

வவுனியா, ஜூலை 22

வவுனியாவிற்கு எதிர்வரும் வாரம் 80 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும் என சுகாதார அமைச்சர் தெரிவித்தார் என பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், “நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் விசேட கூட்டம் இடம்பெற்றது. இதன்போது வவுனியா மாவட்டத்துக்கு 1000 தடுப்பூசிகள்தான் இது வரை வழங்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் இரண்டாவது மக்கள் தொகை கொண்ட மாவட்டமான வவுனியாவுக்கு அதிக எண்ணிக்கையில் கொரோனா தடுப்பூசிகளை தாருங்கள் என நான் கேட்டேன்.

இதற்கு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி 26ஆம் திகதி எமது நாட்டுக்கு வர இருக்கின்ற தடுப்பூசிகளில் 80 ஆயிரம் தடுப்பூசிகளை தருவதாக உறுதியளித்துள்ளார்.” எனக் குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவில் சிறப்பாக நடந்த ஹஜ் பெருநாள்



வவுனியா, ஜூலை 22

இஸ்லாமியர்களினால் ஹஜ் பெருநாள் நிகழ்வுகள் நேற்று வவுனியாவில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வவுனியா பட்டாணிசூர் முகைதீன் ஜூம்மா பெரிய பள்ளிவாசலில் மௌலவி ஏம். அமீனுதீன் தலைமையில் தொழுகை இடம்பெற்றது.

இதன்போது கொரோனா பரவல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு சுகாதார விதிமுறைகளை பேணியவாறு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# இன, மத பேதம் இல்லாமல் வடக்கில் பணியாற்றுவேன்

## புதிய பிரதம செயலாளர் தெரிவிப்பு



வவுனியா, ஜூலை 22

**வடக்கு மாகாண மக்களுக்கு இனமத பேதமற்று எனது சேவையை பணிகளை முன்னெடுப்பேன் என்று புதிய பிரதம செயலர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.**

வவுனியா அரச அதிபராக கடமையாற்றி வடமாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் சமன் பந்துலசேனவுக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது.

தமிழ்விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னதாக வவுனியா மாவட்ட செயலக வாயிலில் இருந்து மங்கள வாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்ட பிரதம செயலாளருக்கு மாலை அணிவித்து கௌரவம் அளிக்கப்பட்டது.

நிகழ்வில் மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்கள், அரச உயர் அதிகாரிகள், மதகுருமார்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அரச அதிபராக கடமையாற்றிய குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எனக்கு பக்கபலமாக செயற்பட்ட அரசஅதிகாரிகள், அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் ஊடகத்துறையினருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். வடக்கின் பிரதம செயலாளராக கடமை ஏற்கவுள்ள நிலையில் வடமாகாண மக்களுக்கு இனமத பேதமற்று எனது சேவையை பணிகளை முன்னெடுப்பேன் என்று அவர் கூறினார்.

# ரூபா 8 லட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை 22

சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட 8 லட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் பூநகரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இலுப்பக்கடவையில் இருந்து ரிப்பர் வாகனத்தில் கருங்கற்களால் மறைத்து மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக பொலிஸாரால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அமைவாக நேற்று அதிகாலை சங்குபிட்டி பாலத்தருகில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் வைத்து குறித்த ரிப்பர் வாகனம் சோதனைக்குட் படுத்தப்பட்டது.

குறித்த ரிப்பர் வாகனத்தில் கருங்கற்களால் சூட்சுமமாக மறைத்து மரக்குற்றிகள் எடுத்து செல்லப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் குறித்த ரிப்பர் வாகனமும் சாரதியும் கைது செய்யப்பட்டு பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மரக்குற்றிகள் யாழ்ப்பாணம் எடுத்து செல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும், 24 மரக்குற்றிகளும் 8 லட்சத்துக்கு அதிக பெறுமதி கொண்டது எனவும் பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணை களின் பின்னர் பொலிஸாரால் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டை அச்சுறுத்தும் டீனியா தோல் நோய்!

கொழும்பு, ஜூலை 22

கொரோனாவுக்கு மத்தியில் இலங்கையில் டீனியா (TINEA) என அழைக்கப்படும் தோல் நோய் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வட மத்திய மாகாணம் உட்பட பல பகுதிகளில் இந்த தோல் நோய் பதிவாகியுள்ளதாக அனுராதபுர போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஹேமா வீரகோன் தெரிவித்துள்ளார்.

ஒரு பூஞ்சையால் ஏற்படும் டீனியா என அடையாளம் காணப்பட்ட இந்த நோய் வேகமாகப் பரவி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகள், மருந்துகளுக்கு ஒவ்வாமை, சுய மருந்துகள் மற்றும் சமூக நடவடிக்கைகள் ஆகியவை தொற்று நோயை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லா வயதினரும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என அனைவரும் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நோயிலிருந்து மீள சுமார் ஆறு மாதங்களுக்கு மருத்துவ ஆலோசனையின் கீழ் சிகிச்சைப் பெற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு இல்லையெனில் தொற்று மோசமடையக்கூடும் என்பதோடு, பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வினால் 1 லீற்றர் பெற்றோல் 179 ரூபாவாக உயர்ந்திருக்கும்!

## வலுசக்தி அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

கடந்த காலங்களில் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்பட்டபோது இலங்கையில் எரிபொருள் சூத்திரத்தின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பின் ஒரு லீட்டர் பெற்றோலின் வலை 179 ரூபாவாக உயர்ந்திருக்கும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாட்டின் எரிபொருள் விலை பிரச்னை நீண்டகாலப் பிரச்னை என்பதால், அதனை தீர்ப்பதற்கு முறையான திட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும் என்று நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமக்கு எதிராக எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சியினர் எரிபொருள் விலையை அதிகரிப்பை தடுப்பதற்கான மாற்று வழியை முன்வைப்பதற்கு தவறி விட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் உலக சந்தையில் எரிபொருள் விலை பத்து சதவீதமாக அதிகரித்த போதும், இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. விலைச் சூத்திரம் காணப்பட்டிருந்தால், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 179 ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசலின் விலை 134 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கும் என அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்-என்றுள்ளது.

(அ)

# மல்லாகம் நீதிமன்றுக்கு சென்றவரின் மோ.சைக்கிள் திருடியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மல்லாகம் நீதிமன்றுக்கு வழக்கு ஒன்றுக்கு சென்றவரின் மோட்டார் சைக்கிளைத் திருடியவர் தெல்லிப்பழை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் மற்றும் 4 சைக்கிள்கள், 3 அலைபேசிகள், ஒரு வாள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த ஒருவரே நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் மல்லாகம் நீதிமன்ற நடவடிக்கைக்காக சென்ற ஒருவர் தனது 3 அலைபேசிகளை ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளின் இருக்கைக்கு கீழான தொட்டியில் வைத்து பூட்டிவிட்டு நீதிமன்றுக்குள் சென்றுள்ளார்.

வழக்கு முடிவடைந்து வெளியே வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. அவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை நேற்று கைது செய்தனர். அவரிடமிருந்து திருடப்பட்ட ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் மற்றும் 4 சைக்கிள்கள், 3 அலைபேசிகள், ஒரு வாள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபருக்கு எதிராக கொள்ளை மற்றும் திருட்டு வழக்குகள் நீதிமன்றில் வழக்குகள் நிலுவையுள்ளன.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட அலைபேசிகளை வாங்கி உடைமையில் வைத்திருந்த மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ராஜபக்ஷ குடும்பம் இன்னும் பலமாக உள்ளதை நம்பிக்கை வாக்கெடுப்பு வெளிப்படுத்தியுள்ளது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்



கிளிநொச்சி, ஜூலை 22

ராஜபக்ஷ குடும்ப ஆட்சி இன்னும் பலமாக இருப்பதான செய்தியை வாக்கெடுப்பு கூறுகின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வாக்கெடுப்பு தொடர்பில் ஊடகவியலாளர் வினவியபோது பதிலளிக்கையிலேயே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் என்பது அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமா அல்லது அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்டிருக்க வேண்டுமா என்ற வாதப் பிரதிவாதங்கள் எதிர் தரப்பிடமே இருக்கின்றது.

ஆகவே எல்லோரும் இணைந்து இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொடுத்ததாக தெரியவில்லை. சஜித் தலைமையிலான மக்கள் சக்தி இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கான முன்னறிவித்தலை கொடுத்திருக்கின்றது.

ஆனாலும்கூட அவர்களுடன் இணைந்து இருக்கக்கூடிய எதிர்த் தரப்புக்கள் அனைத்தும் அவர்களுடன் பேசி இது தொடர்பான முடிவுகளுக்கு வந்திருக்க வேண்டும். அரசாங்கம் உண்மையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இருக்கின்றது.

ஆகவே அவர்கள் தமது அமைச்சரை தோற்கடிப்பதற்கு இடமளிப்பார்கள் என்பதற்கில்லை. இருந்தாலும் கூட ஒரு கட்சி இவ்வாறான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருகின்றபோது எதிர்த்தரப்பில் இருக்கும் கட்சிகளுடன் பேசியிருக்கவேண்டும்.

பெற்றோல் விலை உயர்வுக்கு அமைச்சரே பொறுப்பு என்ற வகையில்தான் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை வந்தது. அது வெறுமனே அவர்தான் பொறுப்பு கூறவேண்டும் என்றால், நிச்சயமாக இல்லை. அதற்கு அரசாங்கமும் பொறுப்பு கூற வேண்டும்.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சி என்பது இன்னும் பலமாகவும், அசைக்க முடியாதவாறும் இருக்கின்றது என்ற ஒரு செய்தியை வாக்கெடுப்பு காட்டி நிற்கின்றது - என்றார்.

# மாகாண அதிகாரங்களை மத்திய அரசு கையகப்படுத்துவதற்கு எதிராக வழக்கு

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜுலை 22

**மாகாண பாடசாலைகளை மத்திய அரசின் ஆளுகைக்குட் படுத்துவதற்கு எதிராக வெகுவிரைவில் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்யவுள்ளதாக தமிழ் மக்கள் தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போதுள்ள அரசானது மாகாணங்களுக்கே உரித்தான கல்வி சுகாதார போன்ற விடயங்களை மாகாணங்களுக்கான அதிகாரங்களை தன் வசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அதற்கு சிலர் துணை போகிறார்கள். சில மாயைகளை நம்பி சிலர் மாகாண அதிகாரத்தை மத்திக்கு தாரை வார்க்கும் முகமாக செயற்படுகின்றார்கள்.

ஆனால் தற்போதுள்ள அரசானது 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு உட்பட்ட கல்வி சுகாதாரம் போன்ற விடயங்களை தனது ஆளுகைக்கு உட்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் நாம் நேற்று கல்வியலாளர்களுடன் ஒரு சந்திப்பினை மேற்கொண்ட அந்த சந்திப்பில் ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

அதாவது இந்த மாகாணத்துக்குட்பட்ட பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளை மத்தி தனது ஆளுகைக்குட்படுத்தப்படுவதற்கு எதிராக வெகு விரைவில் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-03)

# டயகம சிறுமி உயிரிழந்த விவகாரம்: புவக்பிட்டிய அதிபரிடம் விசாரணை

கொழும்பு, ஜுலை 22

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் வீட்டில், பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில் எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்த 15 வயதான சிறுமி கல்வி கற்றதாகக் கூறப்படும் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் ஆகியோரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவிசாவளை புவக்பிட்டிய கிரிவந்தல பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் அதிபர் மற்றும் பிரதி அதிபர் ஆகியோரே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த சிறுமி விவகாரம் தொடர்பில் அந்த வீட்டிலிருந்த மற்றுமொரு நபரும் நேற்று முன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

# ஜனாதிபதி - மைத்திரி இடையேயான சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜுலை 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், மைத்திரி உள்ளிட்ட சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 27ஆம் திகதி இந்த சந்திப்பு நடைபெறும் என்று சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

# மலையக சிறுமிகளை கடத்திச் செல்லும் தரகர்களுக்கு தக்க பாடம் புகட்டப்படும்

## கூறுகின்றார் பழனி திகாம்பரம்

கொழும்பு, ஜுலை 22

அற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு மலையகத்திலிருந்து சிறார்களை வீட்டுவேலைக்கு அழைத்துச்செல்லும் தரகர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டியுள்ளது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைசெய்த நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி ஹற்றனில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே திகாம்பரம் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ரிஷாத் பதியுதீன் வீட்டில் வேலைசெய்த சிறுமி தீ மூட்டிக்கொண்டாரா, அல்லது தீ வைத்து கொளுத்தப்பட்டாரா என்பது தொடர்பில் கண்டறியப்படவேண்டும். இச்சம்பவம் தொடர்பில் அடி முதல் முடிவரை அனைத்து விடயங்களும் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

அதன் பின்னணியில் செயற்பட்ட அனைவருக்கும் தக்க தண்டனை வழங்கப்படவேண்டும். இதற்கான நீதி விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து இது தொடர்பில் நாம் கோரிக்கை விடுத் துள்ளோம். எனவே, நீதி விசாரணை உரிய வகை யில் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றோம்.

அனைவருக்கும் கஷ்டம் உள்ளது. அதற்காக சிறார்களை வேலைக்கு அனுப்புவதை அனுமதிக்க முடியாது. நாட்டில் வேறு பகுதிகளில் அவ்வாறு நடைபெறுவதில்லை. மலையகத்தில் இருந்து தான் சிறார்கள் இவ்வாறு வீட்டு வேலைக்கு செல்கின்றனர். இதன் பின்னணியில் செயற்படும் தரகர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். சிறார்களை வேலைக்கு அழைத்து செல்வது ஆட்கடத்தலுக்கு ஒப்பான செயலாகும் - என்றார்.

## 5,000 ரூபா கொடுப்பனவில் முறைகேடு:

# அதிகமாக வழங்கப்பட்டுள்ள பணத்தை மீளப்பெற ஏற்பாடு

கொழும்பு, ஜுலை 22

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட 5,000 ரூபா கொடுப்பனவில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் பின்னர் அது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொகைக்கு அதிகமான பணம், இந்த நிவாரணத் திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வாளர் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்களினால் இழக்கப்பட்ட பணத்தை மீள பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்த விரிவான அறிக்கையை எதிர்வரும் நாள்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வாளர் மேலும் குறிப்பிட்டார்.

# கொரோனா தடுப்பூசிகள் வழங்கலில் வவுனியா ஆசிரியர்கள் புறக்கணிப்பு

வவுனியா, ஜுலை 22

கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்படுவதில் வவுனியா ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடு பூராகவும் கொவிட் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் மாதம் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும் நிலையில் ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் அநேகமான மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளில் கணிசமானவை வழங்கப்பட்டுவிட்டன.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், வவுனியா மாவட்டத்தில் 2802 ஆசிரியர்களும், 205 அதிபர்களும், 198 பாடசாலை மற்றும் வலயத்தில் பணியாற்றும் ஏனைய ஊழியர்களும் உள்ள நிலையில் அவர்களுக்கான தடுப்பூசிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில், கொவிட் தடுப்பூசி வழங்கலில் வவுனியா மாவட்ட ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட் டுள்ளதாக ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# துமிந்தவின் பொதுமன்னிப்புக்கு எதிராக ஹிருணிகா மனு தாக்கல்

கொழும்பு, ஜுலை 22

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் படுகொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணான விடயம் என அறிவிக்குமாறு கோரிக்கை விடுத்து மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, குறித்த அடிப்படை உரிமை மனுவொன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன், மரணதண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கான ஜனாதிபதியின் உத்தரவை ரத்து செய்யுமாறு ஹிருணிகா பிரேமச்சந்திர கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், நீதி அமைச்சர் உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# டயகம சிறுமி மரணத்துக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும்

## ஹற்றனிலும் போராட்டம்



கொழும்பு, ஜுலை 22

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைசெய்த நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டும். குற்றவாளிகள் அனைவரும் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி ஹற்றனில் நேற்று முற்பகல் 11 மணிக்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொழிலாளர் தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. தலைமையேற்றார்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதித் தலைவர், மகளிர் அணி உறுப்பினர்கள் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் போராட்டத்தில் பங்கேற்று, நீதிக்காக குரல் எழுப்பினர்.

“டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும், இது விடயத்தில் சட்டம் உரிய வகையில் செயற்பட வேண்டும். நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புபட்ட குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.” என போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியதோடு, பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், மலையகத்திலிருந்து சிறார்களை எவரும் வேலைக்கு அமர்த்தக்கூடாது, அவர்களுக்கான கல்வி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குரல் எழுப்பினர்.

(அ)






> **இனிப்பான பழங்களை வழங்குவதன் மூலமாக சுமூகமான உறவுகளைப் பேணும் பாகிஸ்தான் முன்னாள் தலைவர்களின் பாதையைத்தான் பங்களாதேஷ் பிரதமரும் இப்போது பின்பற்றியிருப்பதாகவே விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இலங்கையுடனான பாகிஸ்தானின் 'மாம்பழ இராஜதந்திரம்' இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் சுவாரஸ்யமான சம்பவங்கள் சிலவற்றை உள்ளடக்கியது.**

# தெற்காசியாவில் மாம்பழ இராஜதந்திரம்

## பாக் இராணுவ ஆட்சியாளர் அனுப்பிவைத்த மாம்பழக்கூடையை திருப்பிய அனுப்பிவைத்த சிறிமாவோவின் செயலின் பின்னணி என்ன?

**பவித்திரன்**

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா, பங்களாதேஷ் நாட்டின் சுவைமிகுந்த மாம்பழங்களை தனது அழகிய பரிசாக இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சில தினங்களுக்கு முன்னர் அனுப்பிவைத்திருந்தார். இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் தாரெக் எம்.டி.அரிபுல் இஸ்லாம் இந்த மாம்பழங்களை பிரதமரின் உத்தியோகபூர்வ வாஸஸ்தலத்தில் வைத்து ஒப்படைத்தார்.

இந்த பரிசுக்கு பங்களாதேஷ் பிரதமருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கும் இடையிலான பலனளிக்கும் நட்பு உறவைக் குறிக்கிறது என்று அவர் கூறினார். மாம்பழங்களைப் பரிசாகக் கொடுப்பதன் மூலமாக உறவுகளைப் பலப்படுத்தும் ராஜதந்திரம் தெற்காசியாவைப் பொறுத்தவரையில் புதிதல்ல. பாகிஸ்தான் முதல் இப்போது பங்களாதேஷ் வரையில், நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு இராஜதந்திர நகர்வாக இது உள்ளது.

இந்த "மாம்பழ இராஜதந்திரம்" பாகிஸ்தானில் பிரபலமானது. "பழங்களின் அரசன்" என அவர்கள் மாம்பழங்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தவிர, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா 2,600 கிலோ ஹரிபங்கா (Haribhanga) வகையான மாம்பழங்களை அனுப்பி வைத்திருந்தார். இதேபோல மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பனர்ஜிக்கும் அவர் மாம்பழப் பொதி ஒன்றை பங்களாதேஷ் பிரதமர் தனது அன்பளிப்பாக அனுப்பியிருந்தார். பங்களாதேஷ் மாம்பழங்களில் ஹரிபங்கா ரக மாம்பழங்கள் மிகவும் சிறப்பானதாகக் குறிப்பிடப்படுகின்றது. இப்போது அவை அனுப்பப்படுவதற்கு அதன் சீசனும் காரணமாக இருக்கலாம்.

இந்தியா தடுப்பூசி இராஜதந்திரத்தைக் கையாண்ட பின்னணியிலேயே பங்களாதேஷ் மாம்பழ இராஜதந்திரத்தைக் கையாண்டது. இந்தியாவின் தடுப்பூசி இராஜதந்திரம், உள்நாட்டில் ஏற்பட்ட நிர்ப்பந்தங்களால் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், இலங்கை, பங்களாதேஷ் உட்பட அதன் அண்டை நாடுகளில் தடுப்பூசி இல்லாமல் குழப்பமான ஒரு நிலை ஏற்பட்டது. இந்தப் பின்னணியில் மாம்பழ இராஜதந்திரத்தை பங்களாதேஷ் பயன்படுத்தியிருக்கின்றது.

இனிப்பான பழங்களை வழங்குவதன் மூலமாக சுமூகமான உறவுகளைப் பேணும் பாகிஸ்தான் முன்னாள் தலைவர்களின் பாதையைத்தான் பங்களாதேஷ் பிரதமரும் இப்போது பின்பற்றியிருப்பதாகவே விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இலங்கையுடனான பாகிஸ்தானின் 'மாம்பழ இராஜதந்திரம்' இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் சுவாரஸ்யமான சம்பவங்கள் சிலவற்றை உள்ளடக்கியது.

1977 ஜூலையில் பொதுத் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் அந்தச் சம்பவம் இடம்பெற்றது. பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் ஸியா உல் ஹக் ஒரு கூடை நிரம்பிய இனிப்பான மாம்பழங்களை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு அனுப்பி வைத்திருந்தார். பாகிஸ்தானில் சுல்பிகார் அலி பூட்டோவை இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் கவிழ்த்த ஜெனரல் ஸியா, தன்னை பாகிஸ்தானுடைய ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்தியிருந்தார்.

இஸ்லாமாபாத்திலிருந்து அனுப்பப்பட்ட அந்த மாம்பழக்கூடை, கொழும்பு, றோஸ்மீட் பிளேஸில் உள்ள சிறிமாவோ பண்டாரநாயக்கவின் இல்லத்துக்கு கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் மூலமாக சேர்ப்பிக்கப்பட்டது. பாகிஸ்தானில் மாம்பழங்களுக்கு புகழ்பெற்ற பஞ்சாப்பின் முல்தான் என்ற பகுதியிலிருந்தே குறிப்பிட்ட மாம்பழங்கள் விஷேடமாகப் பெறப்பட்டிருந்தன. சிறிமாவோ அம்மையாருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மாம்பழக் கூடையுடன், ஜெனரல் ஸியாவின் விஷேட கடிதம் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

அப்போது கொழும்பில் பாகிஸ்தானின் தூதுவராகக் கடமையாற்றிய முயடனை முயனளைபன தன்னுடைய தூதரகத்தின் இரண்டாவது செயலாளரிடம் குறிப்பிட்ட மாம்பழக்கூடையும், ஜெனரலின் கடிதமும் இலங்கை பிரதமரிடம் பாதுகாப்பாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்.

ஆனால், இதற்கு பிரதமர் சிறிமாவோவிடமிருந்து கிடைத்த பதில் எதிர்பார்க்காத ஒன்றாகவே இருந்தது. மறுநாள் அந்த மாம்பழக்கூடை அப்படியே திரும்பி வந்த போது, பாகிஸ்தான் தூதுவர் அதிர்ச்சியடைந்தார். மாம்பழக்கூடையுடன், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடனான கடிதம் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தான் தூதுவருக்கு இலங்கைப் பிரதமர் எழுதிய அந்தக் கடிதத்தில், "பாகிஸ்தானிய மாம்பழங்கள் அதன் சுவையினாலும், வாசனையினாலும் நன்கு அறியப்பட்டவை. ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் சார்பாக அவற்றை அனுப்பிவைத்தமைக்கு நன்றி. ஆனால், பாகிஸ்தானின் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் சுல்பிஹார் அலி பூட்டோவின் இரத்தத்தை தனது கைகளில் கொண்டுள்ள ஒருவரிடமிருந்து அவ்வாறான பரிசுப் பொதி ஒன்றைப் பெற்றுக்கொள்ள என்னால் முடியாது. அவர் பாகிஸ்தானின் தலைவராக மட்டும் இருக்கவில்லை. மூன்றாம் உலக நாடுகளின் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். தயவு செய்து இதனை அனுப்பியவரிடமே இதனைத் திருப்பிக்கொடுத்துவிடுங்கள்" என தனது கடிதத்தில் சிறிமாவோ பண்டாரநயக்க குறிப்பிட்டிருந்தார்.

பூட்டோ பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் ஜெனரல் ஸியாவுல் ஹக்கினால் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார். சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் நெருக்கமான உறவுகளை பூட்டோ வைத்திருந்தார் என்பதுடன், அணிசாரா அமைப்பு போன்றவற்றிலும் இணைந்து செயற்பட்டார். அவர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்பட்டது இலங்கையிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. மாம்பழக் கூடையை சிறிமாவோ திருப்பி அனுப்பியது அதன் பிரதிபலிப்புத்தான்.

"இதனை அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பிவிடுங்கள்" என மாம்பழக் கூடையை சிறிமாவோ திருப்பி அனுப்பி வைத்ததிருந்தாலும், அவை இஸ்லாமாபாத்துக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படவே இல்லை. பாகிஸ்தான் தூதரக பணியாளர்களே அவற்றைச் சுவைத்தார்கள்.

அதேவேளையில், சிறிமாவோவின் செய்தி வெளிவிவகார அமைச்சினால் இஸ்லாமாபாத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து ராவல்பிண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் சேர்ப்பிக்கப்பட்டது.

உண்மையில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் இந்தப் பதிலடி ஒரு வழமைக்கு மாறான இராஜதந்திர நடவடிக்கையாகவே இருந்தது. பூட்டோவை தூக்கிலிட வேண்டாம் எனவும், தேவை எனில் அவரை நாட்டுக்கு வெளியே அனுப்பி வையுங்கள் எனவும் பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளரிடம் சிறிமாவோ கோரிக்கை விடுத்திருந்தார். கொழும்பில் அவர் அஞ்ஞானவாசம் இருப்பதற்குக்கூட இடமளிக்க சிறிமாவோ தயாராக இருந்தார்.

அதனை இராணுவ ஆட்சியாளர் நிராகரித்திருந்தார். பதிலாக மாம்பழக் கூடையை அனுப்பிவைத்து உறவுகளைப் புதுப்பிக்க முற்பட்டார். இதுதான் சிறிமாவோவின் சீற்றத்துக்குக் காரணமாகியது. இதேகாலப்பகுதியில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் மாம்பழக் கூடைகளை அனுப்பியிருந்தார். ஆனால், அந்த நாடுகளின் தலைவர்களிடமிருந்து இதற்காக எவ்வாறான பதில் கிடைத்து என்பது தெரியவில்லை.

பூட்டோவின் ஆட்சியைப் பலவந்தமாகக் கவிழ்த்தது. அவருக்கு தூக்குத் தண்டனை விதித்தது என்பன அண்டை நாடுகள் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. அந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத்தான் இராணுவ ஆட்சியாளர் மாம்பழ இராஜதந்திரத்தைக் கையாண்டார்.

பல தசாப்த காலமாகவே இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவற்கு "பழங்களின் அரசன்" எனப்படும் மாம்பழங்களை அன்பளிப்பாக அனுப்பிவைக்கும் இராஜதந்திரத்தை பாகிஸ்தான் கையாண்டு வருகின்றது. 1970 களின் நடுப்பகுதியிலிருந்து இந்த மாம்பழ இராஜதந்திரத்தை பாகிஸ்தானிய பிரதமர்களும், வெளிவிவகார அமைச்சர்களும் கையாண்டு வந்துள்ளார்கள்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பூட்டோ 1972 இல் முதல் முறையாக இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு மாம்பழக்கூடை ஒன்றை அன்பளிப்பாக அனுப்பிவைத்து இந்த மாம்பழ இராஜதந்திரத்தை ஆரம்பித்தார். பாகிஸ்தான் இரண்டாகப் பிளவுபடுத்தப்பட்டு பங்களாதேஷ் உருவாக்கப்பட்ட அடுத்த வருடமே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பங்களாதேஷ் உருவாக்கப்படுவதற்கு இந்தியா காரணமாக இருந்துள்ளது என்ற நிலையிலும், இந்த நகர்வை பூட்டோ மேற்கொண்டார்.

பங்களாதேஷ் பிரிவினைக்குக் காரணமாக இருந்த போரின்போது சுமார் 93,000 பாகிஸ்தானியப் படையினர் போர்க் கைதிகளாக இந்தியாவிடம் அகப்பட்டிருந்தார்கள். இந்திரா காந்தியுடன் பேசி அவர்களுடைய விடுதலையை சாத்தியமாக்குவதற்கான ஆரம்பமாக இந்த மாம்பழ இராஜதந்திரம் அமைந்திருந்தது.

பூட்டோ கையாண்ட அனைத்து நடைமுறைகளையும் தூக்கி எறிந்த இராணுவ ஆட்சியாளர்கள், இந்த மாம்பழங்களை அனுப்பிவைக்கும் இராஜதந்திரத்தை மட்டும் கைவிடவில்லை.

பாகிஸ்தானில் மீண்டும் ஒரு இராணுவ ஏற்பட்டபோது, அதாவது நவாஸ் ஷெரிப்பின் ஆட்சி ஜெனரல் முஷரப்பினால் கவிழ்க்கப்பட்ட பின்னர் அவரும் ஒரு மாம்பழக் கூடையை 1999 இல் மாம்பழக் கூடை ஒன்றை அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியிருந்தார். ஆனால், அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறிமாவோ கால நிகழ்வு இடம்பெறவில்லை. ஆனால், 2015 இல் ஜனாதிபதி மைத்திரிக்கு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அனுப்பிய மாம்பழ பார்சல் ஏற்றுக்கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. அதற்கு தொழில்நுட்ப ரீதியான காரணம் சொல்லப்பட்டது. ■

# பெகாசஸ் ஸ்பைவேர்: இந்திய ஜனநாயகத்தை ஆட்டம் காண வைக்கும் உளவுப் பிரச்னையா?

**பெகாசஸ் ஸ்பைவேர் இந்தியாவுக்கு எப்படி வந்தது? ஏன் அரசை எதிர்த்து போராடும் மக்கள் இலக்கு வைக்கப்பட்டனர்? இந்தியாவில் இருக்கும் அரசியல் தலைவர்களை வேவு பார்க்க கொண்டு வரப்பட்ட மென்பொருளில் அரசுக்கு எந்த பங்கும் இல்லை என்பதை எப்படி நம்ப முடியும்?**




சௌதிக் பிஸ்வாஸ்

“நீங்கள் வேவு பார்க்கப்படுவதாக உணர்ந்தால், அதில் எந்த சந்தேகமும் கொள்ள வேண்டாம்” என்கிறார் ‘தி வொயர்’ செய்தி வலைதளத்தின் நிறுவனர் சித்தார்த் வரதராஜன்.

“இது ஒரு மிகப் பெரிய ஊடுருவல்” என்கிறார் அவர். “யாரும் இதை எதிர்கொள்ளத் தேவை இல்லை”

ஒரு இஸ்ரேலிய நிறுவனத்தால் அரசாங்கங்களுக்கு விற்கப்பட்ட செல்ஃபோன் ஸ்பைவேரால் உலகம் முழுக்க உள்ள பல செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் சித்தார்த் வரதராஜனும் ஒருவர் என்கிறது ஊடக செய்திகள்.

கண்காணிக்கப்படுவதாகக் கூறப்படும் தரவு தளத்திலிருந்து கசிந்த 50,000 எண்களில் 300 எண்கள் இந்தியர்களுடையது என்கிறது தி வொயர் செய்திகள்.

பெகாசஸ் ஸ்பைவேர் குறித்து புலனாய்வு செய்து செய்தி வெளியிட்ட 16 சர்வதேச ஊடகங்களில் தி வொயர் நிறுவனமும் ஒன்று.

ஸ்மார்ட் ஃபோன்களைப் பயன்படுத்துவோரின் கவனத்துக்கே வராமல் பெகாசஸ் ஸ்பைவர் ஸ்மார்ட்ஃபோன்களை பாதிப்பது மற்றும் அதிலிருக்கும் மொத்த தரவுகளைப் பெறுவது போன்ற நடவடிக்கைகள் இது ஒன்றும் முதல் முறை அல்ல.

இந்த பெகாசஸ் ஸ்பைவேரை இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ குரூப் என்கிற மென்பொருள் நிறுவனம் தயாரித்தது. இது பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களை இலக்கு வைக்கிறது.

வாட்ஸ்ஆப் நிறுவனம், தங்களின் சில வாடிக்கையாளர்கள் ஸ்பைவேரால் இலக்கு வைக்கப்பட்டு இருப்பதாக கடந்த 2019ஆம் ஆண்டு கூறிய போது, இந்தியா உட்பட பல நாடுகளில் கண்டனக் குரல்கள் எழுந்தன. 121 பத்திரிகையாளர்கள், அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள் இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்டனர்.

இதில் இந்திய உளவு மற்றும் புலனாய்வு அமைப்புகளுக்கும் பங்கு உண்டு என நிபுணர்கள் கூறினர்.

பெகாசஸ் ஸ்பைவேர் மூலம் 1,400 செல்ஃபோன்கள் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாக வாட்ஸ்ஆப் நிறுவனம், என்.எஸ்.ஓ குழு மீது குற்றஞ்சாட்டி வழக்கு தொடுத்து இருக்கிறது.

பெகாசஸ் மூலம் கண்காணிக்கபடுவதாகக் கூறப்படும் செல்ஃபோன் எண்களின் பட்டியல் எங்கிருந்து கிடைத்தது என்று தெரியவில்லை. அதே போல யார் சைபர் ஊடுருவலை நடத்த அனுமதி கொடுத்தார்கள், எத்தனை செல்ஃபோன்கள் உண்மையில் ஊடுருவப்பட்டு இருக்கின்றன என்கிற விவரங்கள் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

கடந்த 2019ஆம் ஆண்டை போலவே, தற்போதும் என்.எஸ்.ஓ குழு தாங்கள் எந்த தவறையும் செய்யவில்லை எனவும், இந்த குற்றச்சாட்டுகளுக்கு எந்த வித ஆதாரமும் இல்லை எனவும் கூறுகிறது.

“பெகாசஸ் ஸ்பைவேரை தவறாகப் பயன்படுத்தியதாக வரும் நம்பத் தகுந்த குற்றச்சாட்டுகளை விசாரித்து அதன் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகளை எடுப்போம்” என அந்நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

அதே போல நரேந்திர மோதி தலைமையிலான இந்திய ஒன்றிய அரசும், எந்த வித அங்கீகரிக்கப்படாத கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என கூறியுள்ளது.

மாநில மற்றும் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தின் உச்ச பதவியில் இருக்கும் அதிகாரிகளின் அனுமதியோடு, இந்தியாவின் இறையாண்மை மற்றும் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காக இந்தியாவில் ஒருவரின் செல்ஃபோனை ஒட்டு கேட்கலாம்.

“ஆனால் அதற்கு ஒப்புதல் அளிக்கும் செயல்முறை எப்போதும் வெளிப்படையாக இல்லை” என்கிறார் டெல்லியில் இருக்கும் அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் அமைப்பின் உறுப்பினர் மனோஜ் ஜோஷி.

கடந்த 2019ஆம் ஆண்டு, பெகாசஸ் தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தில் கேரளத்தைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் கே கே ராஜேஷ் அரசிடம் பல கேள்விகளை குறிப்பிட்டு எழுப்பினார்.

பெகாசஸ் ஸ்பைவேர் இந்தியாவுக்கு எப்படி வந்தது? ஏன் அரசை எதிர்த்து போராடும் மக்கள் இலக்கு வைக்கப்பட்டனர்? இந்தியாவில் இருக்கும் அரசியல் தலைவர்களை வேவு பார்க்க கொண்டு வரப்பட்ட மென்பொருளில் அரசுக்கு எந்த பங்கும் இல்லை என்பதை எப்படி நம்ப முடியும்? என பல கேள்விகளை எழுப்பி இருந்தார்.

என்.எஸ்.ஓ குழுவோ, தங்களின் மென்பொருளை, மக்களின் உயிரைக் காக்கவும், குற்றங்களைத் தடுக்கவும், தீவிரவாத செயல்கள் நடக்காமல் தடுக்கவுமே அரசாங்கத்தின் உளவு மற்றும் புலனாய்வு அமைப்புகளுக்கு மட்டுமே விற்பதாக கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் அதிகாரபூர்வமாக 10 அரசு முகமைகளுக்கு அழைப்பை ஒட்டுக் கேட்கும் அதிகாரம் உள்ளது. அதில் மிகவும் வலிமையான அமைப்பு என்றால் அது கடந்த 134 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் ஐபி எனப்படும் இன்டலிஜென்ஸ் பீரோ என்கிற உள்நாட்டு புலனாய்வு அமைப்புதான். இந்த அமைப்பு இந்தியாவிலேயே மிகப் பெரிய மற்றும் வலிமை வாய்ந்தது. இதற்கு பல்வேறு அதிகாரங்கள் இருக்கின்றன.

இந்த அமைப்பு தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து மட்டும் கண்காணிக்காமல், நீதிபதிகள் போன்ற அரசின் உயர் பதவிகளுக்கு வருவிருப்பவர்களின் பின்புலங்களையும் பரிசோதிக்கிறது என ஒரு நிபுணர் கூறினார்.

இந்திய ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்கள் கட்சி பாகுபாடின்றி தங்களின் எதிரணியில் இருப்பவர்கள் மற்றும் தங்கள் சொந்த கட்சியினரை இந்த உளவுத் துறை முகமைகளைப் பயன்படுத்தி வேவு பார்த்திருக்கிறார்கள் என்கிறது வரலாறு.

கடந்த 1988ஆம் ஆண்டு கர்நாடக முதல்வராக இருந்த ராமகிருஷ்ண ஹெகடே தன் எதிரணியில் இருப்பவர்கள் மற்றும் சொந்தக் கட்சிக்காரர்கள் என 50 பேரை ஒட்டுக்கேட்க உத்தர விட்டதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து பதவி விலகினார்.

1990ஆம் ஆண்டு, அரசு, தான் உட்பட, 27 அரசியல்வாதிகளின் தொலைபேசியை ஒட்டுக் கேட்பதாக குற்றம்சாட்டினார் முன்னாள் பிரதமர் சந்திரசேகர்.

கடந்த 2010ஆம் ஆண்டு நீரா ராடியா மற்றும் முன்னணி அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பத்திரிகையாளர்களுக்கு மத்தியில் நடந்த தொலைபேசி உரையாடல்களை வரித் துறையினர் ஒட்டுக்கேட்டனர். பின் அதை ஊடகங்கள் மத்தியில் கசியவிட்டனர்.

“தற்போது ஒட்டுக் கேட்கப்படும் நபர்களின் எண்ணிக்கை, வேகம், தனித்துவம் எல்லாம் மாறி இருக்கிறது. எதிர் கருத்து தெரிவிப்பவர்கள் மின்னணு ரீதியில் கண்காணிக்கப்படுகிறார்கள்” என்கிறார் தொழில்நுட்பவியலாளர் மற்றும் பொது மக்கள் கொள்கை ஆய்வாளர் ரோஹினி லக்ஷனே.

மாநில உளவு அமைப்புகள் கண்காணிப்பதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க, அமெரிக்கா போல இந்தியாவில் சிறப்பு நீதிமன்றங்கள் கிடையாது.

இந்தியாவில் இருக்கும் உளவு அமைப்புகளின் அதிகாரங்களைப் பயன்படுத்துவது மற்றும் செயல்பாடுகளை நெறிமுறைப்படுத்துவதற்கான ஒரு சட்டம் கொண்டு வரும் முயற்சியில் தோல்வி கண்டார் முன்னாள் மத்திய அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோஜ் திவாரி.

“இந்திய மக்களை வேவு பார்க்கும் உளவு முகமைகளை மேற்பார்வை செய்ய யாரும் இல்லை. தற்போது அப்படிப்பட்ட சட்டங்களுக்கான நேரம் வந்து இருக்கிறது” என்கிறார் மனோஜ். அவர் தன் பழைய சட்டத்தை மீண்டும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பதாக என்னிடம் கூறினார்.


“இந்தியாவுக்கு உடனடியாக கண்காணிப்பு சீர்திருத்தம் தேவை” என்கிறார் ரோஹினி லக்ஷனே.

சில கடினமான கேள்விகளை கேட்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்கிறார் லக்ஷனே. ஒட்டு கேட்கப்பட்ட தரவுகளின் பயன் முடிந்த பிறகு என்ன செய்யப்படும்? அது எங்கு சேமித்து வைக்கப்படும்? அதை அணுக யாருக்கெல்லாம் அனுமதி உண்டு? அரசு முகமைகள் சாராத வெளி ஆட்கள் யாருக்காவது அதை அணுக அனுமதியுள்ளதா? என்ன மாதிரியான டிஜிட்டல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன போன்றவைகளை கேட்கலாம் என்கிறார்.




பி.பி.சி.

33. ஒருவர் ஓர் இடத்தில் நின்று வடக்குத்திசை நோக்கி 100m நடந்து அதில் இருந்து கிழக்கு திசை நோக்கி 100m நடந்து அவ்விடத்தில் நின்று முன்னர் புறப்பட்ட ஆரம்ப இடத்தை பார்த்தார் எனின் இவர் பார்த்த திசை யாது?



1) வடமேற்கு 2) தென்மேற்கு 3) வடகிழக்கு



34. 

மேலே காட்டப்பட்டவாறு காகிதத் தாள் ஒன்றை மடித்து துளையிடப்பட்டது. பின்னர் விரிக்கும் போது அதன் துளையிடப்பட்ட கோலம் எவ்வாறு காணப்படும்.

1) 
2) 
3) 




35. காகிதத் தாள்களினைக் கொண்டு பூக்கள் செய்து பூச்சாடியில் வைக்கப்பட்டுள்ள தொடர் ஒழுங்கினை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.


A

B

C

D

E

1) ABCDE 2) ACBDE 3) ACBED




36. எழுத்து, சொல், வாக்கியம், பந்தி என்பதனைக் காட்டும் சரியான படம்




1) 
2) 
3) 

37.
$$\begin{array}{r} P \\ P \\ + \underline{Q} \\ \underline{QP} \end{array}$$


இங்கு P, Q ஆகியன 10 இனை விடக் குறைந்த எண்களாகும் எனின் Q இன் பெறுமானம் யாது?

1) 6 2) 8 3) 1

38.  க்கு  எனின்  க்கு ………………

1) 
2) 
3) 

39. சிறிய சம அளவான சதுரமுகிக் குற்றிகளால் இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது. உருவில் உள்ள சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?



1) 24 2) 48 3) 64

40. ஆசிரியர் வகுப்பில் உள்ள மாணவர் ஐவருக்கு 1 தொடக்கம் 5 வரையான இலக்கங்களை வழங்கினார். இவர்களை அடுத்தடுத்து மூன்று இலக்கங்கள் அமையுமாறு குழுவாக மாறும்படி கூறினார். இவ்வாறு குழுக்களாகும் போது அக்குழுவில் நிச்சயமாக இடம்பெறக்கூடிய இலக்கம்.

1) 2 2) 3 3) 5

***

# டயகம சிறுமி உயிரிழந்தமை குறித்து தொடர் விசாரணைகள் முன்னெடுப்பு

## ரிஷாத் வீட்டில் பணியாற்றிய ஆண் பணியாளரின் கைத்தொலைபேசி பகுப்பாய்வுக்கு அனுப்பிவைப்பு



கொழும்பு, ஜூலை 22

**“நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த 16 வயது சிறுமி ஹிஷாலினி உயிரிழந்த சம்பவம் தொடர்பில், தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய ஆண் பணியாளரின் கைத்தொலைபேசி பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.”**

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“பொரளைப் பொலிஸாருக்கு மேலதிகமாக இரண்டு விசேட குழுக்கள் விசாரணைகளை மேற்கொள்கின்றன.

கொழும்பு தெற்கு பிரிவு சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினரும், கொழும்பு தெற்கு பிரிவு குற்றவியல் விசாரணைப் பிரிவினரும் இந்த விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

நேற்றுமுன்தினம் குறித்த குழுக்கள், சிறுமி முன்னதாக வசித்த, பாடசாலைக்குச் சென்ற அவிசாவளை, புவக்பிட்டி - கிரிவந்தல பிரதேசத்தில், நான்கு பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தன.

குறித்த சிறுமி, கல்வி கற்ற பாடசாலையின் அதிபர் மற்றும் உப அதிபரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த இரண்டு குழுக்கள், டயகம பகுதிக்குச் சென்று, சிறுமியின் தாயாரிடம் நேற்று மீளவும் வாக்குமூலம் பெற்றன. ஏனைய சிலரிடமும் வாக்குமூலங்கள் பெறப்படவுள்ளன.

அத்துடன், ரிஷாத் பதியுதீன் எம்.பியின் வீட்டில் பணியாற்றிய ஆண் பணியாளரின் கைபேசியை பொலிஸார் சில தினங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்டுள்ள நிலையில், அவரிடமும் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த கைபேசியில் ஏதேனும் தகவல்கள் அழிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ள பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் அந்தக் கைபேசி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அது குறித்து அறிக்கை ஒன்றும் பெறப்படவுள்ளது.

இதேநேரம், இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கைபேசி தரவுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கும், வங்கிக் கணக்கை ஆராய்வதற்கும் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, இந்தத் தரவுகளின் அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேநேரம், மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன” - என்றார். (இ)

## கெஸ்பாவையிலுள்ள ஆடை நிறுவனத்தில் ஐவருக்கு ‘டெல்டா’ வைரஸ் தொற்று உறுதி

கொழும்பு, ஜூலை 22

கெஸ்பாவையிலுள்ள ஆடை நிறுவனமொன்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், ஐவருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த நிறுவனத்தில் மேலும் 120 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கெஸ்பாவை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த நிறுவனத்தில் ஐவருக்கு முதலில் டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அங்கு பணியாற்றும் 166 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே, 120 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியவர்களின் மாதிரிகள் ‘டெல்டா’ பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் கெஸ்பாவை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (இ)

## கொரோனா தடுப்பு சட்டத்தை மீறிய மேலும் 207 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் கொரோனாத் தடுப்புக்கான தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட் டில் மேலும் 207 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 51 ஆயிரத்து 392 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## 18 வயதுக்குட்பட்டோரை வேலைக்கு அனுப்பாதீர்

### இராஜாங்க அமைச்சர் ஜீவன் வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 22

மலையகத்தில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களைத் தொழிலுக்கு அனுப்ப வேண்டாம் என்று இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

“முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த, டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஹிஷாலினி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இரண்டு வகையான விசாரணைகளைக் கோரியுள்ளோம்.

குறித்த சிறுமியை பணிக்கு அமர்த்தியமை தொடர்பிலும், அவரின் மரணம் தொடர்பிலும் விசாரணைகளைக் கோரியுள்ளோம்.

இதேவேளை, மலையகத்தில் 18 வயதுக்குக் கீழ் உள்ள சிறுவர்களைத் தொழிலுக்கு அனுப்ப வேண்டாம் என்று குடும்பத்தினரிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதனையும் மீறித் தொழிலுக்கு அனுப்புபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்காகத் தொழில் பயிற்சி நிலையம் ஊடாக தொழில் பயிற்சித் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளோம்” - என்றார். (இ)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 22

ரத்கம மோனியாவத்த தோட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியவர் இரண்டாவது தடவை இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என்றும், இதற்கு முன்பு ரத்கம தேவபத்திராஜ வித்தியாலயத்துக்கு அருகில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரு குழுக்களுக்கு இடையிலான முறுகலே இதற்குக் காரணம் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (இ)

## முடக்கப்பட்டிருந்த மேலும் ஒரு பிரதேசம் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 22

கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் ஒரு பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, களுத்துறை மாவட்டத்தின் தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஹாபுகொட கிழக்கு கிராம சேவகர் பிரிவின் மலபடவத்த பகுதி தனிமைப்படுத்தலில் இருந்து நேற்றுக் காலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வாகன விபத்துக்களால் ஏழு பேர் பரிதாப மரணம்

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்திரம் வாகன விபத்துக்களால் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 3 பேரும் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)



# சீனாவில் சற்று குறைந்த கொரோனா பாதிப்பு

## புதிதாக 22 பேருக்கு தொற்று உறுதி

பீஜிங், ஜுலை 22

சீனாவில் நேற்று முன்தினம் 22 பேருக்கு மட்டும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. சீனாவில் கொரோனா தொற்று வெகுவாகக் குறைவடைந்திருப்பதை இது உறுதிப்படுத்தியது.

உலகில் முதன் முதலாக சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. தற்போது அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கொரோனாவுடன் போராடிக் கொண்டிருக்க, சீனா கொரோனாவை கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டது.

இந்த நிலையில் சீனாவில் மீண்டும் கொரோனா தலைக்காட்டத் துவங்கியுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் சீனாவில் புதிதாக 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 65 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதற்கு முன்பு இந்த ஆண்டு அதிகபட்சமாக கடந்த ஜனவரி 30 ஆம் தேதி 92 பேருக்கு தொற்று உறுதியாகியிருந்தது.

மேலும் அறிகுறி இல்லாத தொற்று பாதிப்புகளை உறுதி செய்யப்பட்ட பாதிப்பாக சீன சுகாதாரத்துறை அறிவிப்பதில்லை. அந்த வகையில் 23 பேருக்கு அறிகுறி இல்லாத கொரோனா தொற்று உறுதியாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த புதிய பாதிப்புகளின் மூலம் சீனாவில் இதுவரை கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 92,364 ஆக உயர்ந்துள்ளது. அதே சமயம் கொரோனாவால் அங்கு இதுவரை 4,636 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா காலத்தில் ஒட்சிசன் ஏற்றுமதியை அதிகரித்தது அரசு



புதுடில்லி, ஜுலை 22

கொரோனா பெருந்தொற்று 2ஆவது அலையின்போது, ஒட்சிசன் ஏற்றுமதியை 70 சதவீதம் அதிகரித்தது மத்திய அரசு என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார். கொரோனா 2ஆவது அலையில் ஒட்சிசன் பற்றாக்குறையால் எந்த மாநிலத்திலும் யாரும் உயிரிழக்கவில்லை என்று மத்திய அரசு தெரிவித்ததற்கு பிரியங்கா காந்தி பதில் அளித்துள்ளார்.

மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பாரதி பிரவீண் பவார் மாநிலங்களவையில் நேற்று எழுத்துபூர்வமாக பதில் அளித்தபோது, "கொரோனா 2ஆவது அலையில் நாட்டில் ஒட்சிசன் பற்றாக்குறையால் யாரும் இறக்கவில்லை என்று மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் அளித்த அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. சுகாதாரம் என்பது மாநிலப் பட்டியலில் வருவது, மாநில அரசுகளுக்கு உட்பட்டது. அவர்கள் அளித்த தகவலின்படி,ஒக்சிஜன் பற்றாக்குறையால் உயிரிழப்பு நடக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

கொரோனா 2ஆவது அலையில் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ஒட்சிசன் பற்றாக்குறையால் நோயாளிகள் உயிரிழந்த சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் நிலையில் மத்திய அமைச்சர் பேசியதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. நாடாளுமன்றத்தில் தவறான தகவலை அளித்தமைக்காக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் மீது உரிமை மீறல் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில், "ஒட்சிசன் பற்றாக்குறையால் யாரும் உயிரிழக்கவில்லை என மத்திய அரசு கூறுகிறது. ஆனால், கரோனா 2ஆவது அலையில் உயிரிழப்புகள் நடந்தன. 2-வது அலையின்போது, ஆக்சிஜன் ஏற்றுமதியை 700 சதவீதம் மத்திய அரசு அதிகரித்தது. கொரோனா 2ஆவது அலையின்போது, ஆக்சிஜன் வழங்குவதற்குப் போதுமான சிலிண்டர்களை மத்திய அரசு வழங்காததால், வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒக்சிஜன் கிடைக்காமல் உயிரிழந்தனர்" எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் தொற்றாளர்களில் 80 வீதம் 'டெல்டா'வினால் பாதிப்பு

## தலைமை மருத்துவ ஆலோசகர் எச்சரிக்கை




வாஷிங்டன், ஜுலை 22

அமெரிக்காவில் பதிவாகும் கொரோனா தொற்றுகளில் 80 வீதத்துக்கும் மேல் டெல்டா வைரஸால் ஏற்படுவதாக அமெரிக்க ஜனாதிபதியின் தலைமை மருத்துவ ஆலோசகர் அன்ரனி ஃபாஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அன்ரனி ஃபாஸி கூறும்போது, "அமெ ரிக்காவில் கடந்த சில வாரங்களாக பதிவு செய்யப்படும் கொரோனா தொற்றுகளில் 80வீதத்துக்கும் மேல் டெல்டா வைரஸால் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தடுப்பூசி காரணமாக அதிகமான நபர்கள் மருத்துவமனைகளில் வந்து அனுமதிக்கப்படுவது குறைந்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"டெல்டா வைரஸ் மிக மோசமான வைரஸ் என்பது தெளிவாகிறது. ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தொற்று பரவுவதை டெல்டா வைரஸ் அதிகப்படுத்தியுள்ளது. டெல்டா வைரஸைக் கட்டுப் படுத்துவதில் அமெரிக்கா சிறப்பாகச் செயல்படுகிறது . அமெரிக்காவில் சில இடங்களில் கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் வேகம் குறைந் துள்ளது. அதனை அதிகரிக்க வேண்டும்" என்று ஃபாஸி முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் அமெரிக்கா வில் தடுப்பூசி இலக்கு எட்டப் படாமல் இருப்பதற்கு சமூக ஊடகங்களே காரணம் என்று அமெரிக்க அரசு கூறியிருந்தது. அமெரிக்காவில் இதுவரை 3 கோடிக்கும் அதிகமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட் டுள்ளனர். 6 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகி உள்ளனர்.

# இந்தியாவுக்கான பயண கட்டுப்பாட்டை தளர்த்திய அமெரிக்கா

வாஷிங்டன், ஜுலை 22

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு வெகுவாக குறைந்துள்ள நிலையில் இந்தியா செல்வதற்கான பயண கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தியது.

இந்தியாவில் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கொரோனா வைரஸ் 2ஆவது அலை உச்சத்தில் இருந்தது. தினந்தோறும் 3 லட்சத்துக்கும் அதிகமான கொரோனா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டன. இதன் காரணமாக உலக நாடுகள் பலவும் தங்கள் நாட்டு மக்கள் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தன.

அந்த வகையில் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் கடந்த மே மாதம் முதல் வாரத்தில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வது தொடர்பான பயண அறிவுரையை வழங்கியது.

அப்போது இந்தியாவில் கொரோனா பாதிப்பு உச்சத்தில் இருந்ததால் 4ஆம் நிலை, அதாவது இந்தியாவுக்கு செல்லவே கூடாது என்கிற பரிந்துரை வழங்கப்பட்டது. அப்போது பாகிஸ்தானுக்கும் இதே பயண பரிந்துரை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பு வெகுவாக குறைந்துள்ள நிலையில், இந்தியா செல்வதற்கு விதிக்கப்பட்ட பயண கட்டுப்பாடுகளை அமெரிக்கா சற்று எளிதாக்கியுள்ளது. அதாவது பயண பரிந்துரையை 4ஆம் நிலையில் இருந்து 3ஆம் நிலைக்கு குறைத்துள்ளது.

3ஆம் நிலை என்பது இந்தியாவுக்கு செல்வதை மறுபரிசீலனை செய்யுங்கள் என்பதை குறிக்கிறது. இந்தியாவை போல பாகிஸ்தானுக்கான பயண பரிந்துரையையும் 4ஆம் நிலையில் இருந்து 3ஆம் நிலைக்கு குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலகின் பணக்காரர் ஜெப் பெசோசும் விண்வெளிக்கு வெற்றிகர பயணம்

வாஷிங்டன், ஜுலை 22,

விண்வெளிக்கு பயணம் மேற்கொண்ட உலக பணக்காரர்களில் ஒருவரான அமேசான் முன்னாள் தலைமை செயல் அதிகாரி ஜெஃப் பெசோஸ் வானில் மிதக்கும் வீடியோவை வெளியிட்டுள்ளார்.

தொழிலதிபர் ரிச்சர்ட் பிரான்சனை தொடர்ந்து உலகின் 'நம்பர் 1' பணக்காரர் ஜெப் பெசோசும் தனது குழுவினருடன் விண்வெளிக்கு வெற்றிகரமாக பயணம் மேற்கொண்டு திரும்பினார்.



இங்கிலாந்தைச் சேர்ந்த பெரும் பணக்காரர் ரிச்சர்ட் பிரான்சன் சமீபத்தில் தனது குழுவினருடன் சொந்த விண்வெளி விமா னத்தில் விண்வெளிக்கு வெற்றிகரமாக பயணம் மேற்கொண்டார்.

அவரைத் தொடர்ந்து, அமேசான் நிறுவன நிறுவனரும், உலகின் 'நம்பர் 1' பணக்காரருமான ஜெப் பெசோஸ், இரு தினங்களுக்கு முன்னர் தனது புளூ ஆரிஜின் விண்வெளி நிறுவன விண்கலம் மூலம் விண் வெளிக்கு பயணம் மேற்கொண்டார்.

அமெரிக்காவின் மேற்கு டெக்சாஸ் மாகாணத்தின் தொலைதூர பகுதியில் உள்ள ஒரு இடத்தில் இருந்து உள்ளூர் நேரப்படி காலை 9.15 மணிக்கு 'நியூ ஷெப்பர்டு' விண்கலம் விண்ணில் பாய்ந்தது. விண்வெளி வீரர்களுடன், செலுத்துனர் இல்லாமல் தானியங்கி முறையில் விண்வெளிக்கு பயணம் மேற்கொண்ட முதல் விண்கலம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெப் பெசோசுடன், அவரது சகோதரர் மார்க் பெசோஸ், 1960-களில் விண்வெளி பயண பயிற்சி பெற்ற 82 வயதான வீராங்கனை மேரி வாலஸ் பங்க், நெதர்லாந்தைச் சேர்ந்த 18 வயது இளைஞர் ஆலிவர் டேமென் ஆகியோரும் விண்வெளிக்கு பயணித்தார்கள்.

சுமார் 100 கி.மீ. தூரத்துக்கு விண்ணில் உயர்ந்த அவர்கள், விண்வெளியில் சில நிமிடங்கள் எடையற்ற நிலையை உணர்ந்தார்கள். ஜெப் பெசோஸ் குழுவினரை விண்வெளிக்கு அனுப்பிய ராக்கெட் முதலில் ஏவுதளத்துக்கு திரும்பியது. அதைத் தொடர்ந்து, பெசோஸ் உள்ளிட்ட நால்வரும் இருந்த, பரசூட்டுடன் இணைக்கப்பட்ட 'கப்சூல்', டெக்சாஸ் பாலைவனத்தில் பத்திரமாக தரையிறங்கியது. மொத்தம் 10 நிமிடங்கள், 20 வினாடிகளில் இந்த விண்வெளி பயணம் நிறைவு பெற்றது.

இதன் மூலம், விண்வெளிக்கு பயணம் செய்த மிக வயதானவர் என்ற பெருமையை வாலஸ் பங்கும், மிக இளவயது நபர் என்ற புகழை ஆலிவர் டேமெனும் பெற்றுள்ளார்கள். விண்வெளி பயணத்தை வெற்றிகரமாக முடித்து பூமி திரும்பிய ஜெப் பெசோஸ் உள்ளிட்டோருக்கு, விண்வெளி சுற்றுலாவில் அவரது போட்டியாளரும், சமீபத்தில் விண்வெளி சென்று திரும்பியவருமான ரிச்சர்ட் பிரான்சன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொழிலதிபர் ரிச்சர்ட் பிரான்சனுடன் இந்திய பெண் ஸ்ரீஷா பந்தலா விண்வெளிக்கு பறந்ததைப் போல, ஜெப் பெசோசின் இந்த விண்வெளி பயணத் திட்டத்தில், மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த சஞ்சல் கவாண்டே இணைந்து பணிபுரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு





# தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து

பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஆவது இருபதுக்கு இருபது போட்டியில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று தொடரை 2 - 1 என கைப்பற்றியுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த 2 போட்டிகளில் இரு அணிகளும் 1-1 என்ற அடிப்படையில் வெற்றி பெருந்த நிலையில் நேற்று முன் தினம் மூன்றாவதும் இறுதியுமான போட்டி இடம்பெற்றது.

எமிரேட்ஸ் ஓல்ட் ட்ரபோர்ட், மான்செஸ்டர் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாத தீர்மானித்து முதலில் களமிறங்கியது.

அதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து பாகிஸ்தான் அணி 154 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக ரிஸ்வான் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களை அடிக்க பக்கர் சமான் 24 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் அதில் ரஷீத் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

பின்னர் 155 ஓட்டங்கள் வெற்றி இலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.4 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவ்வணி சார்பாக ஜேசன் ரோய் 64 ஓட்டங்களையும் டேவிட் மாலன் 31 ஓட்டங்களையும் அடிக்க பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஜேசன் ரோய் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை தொடரின் நாயகனாக லியாம் லிவிங்ஸ்டன் தெரிவு செய்யப்பட்டார்.



# லிவர்பூலிருந்து வெளியேறும் அணித்தலைவர்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டக் கழகமான லிவர்பூலின் அணித்தலைவரான ஜோர்டான் ஹென்டர்சனின் எதிர்காலம் நிச்சயமற்றதாகக் காணப்படுகிறது.

ஏனெனில், லிவர்பூலுடன் இன்னும் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள மத்திய களவீரரான ஹென்டர்சனுடனான லிவர்பூலின் ஒப்பந்தப் பேச்சுகள் தற்போது முறிவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 31 வயதான ஹென்டர்சனை ஒப்பந்தம் செய்வது குறித்து லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனும் ஆராய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஒலிம்பிக் பட்மின்டன் தொழில்நுட்ப அதிகாரியாக மலையகத்தின் அகல்யா

டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பட்மின்டன் தொழில்நுட்ப அதிகாரியாக கடமையாற்றும் பொருட்டு ஊவா மாகாணத்தின் பசறை தமிழ் மகா வித்தியலாத்தில் (தேசிய பாடசாலை) உடற்கல்வி ஆசிரியையாக கடமையாற்றும் மாரிமுத்து அகல்யா ஜப்பான் பயணமானார்.

ஒலிம்பிக் விளையாட்டு விழா வரலாற்றில் தொழில்நுட்ப அதிகாரியாக கடமையாற்றுவதற்கு தெரிவாகியுள்ள முதலாவது இலங்கைத் தமிழர், குறிப்பாக மலையகத் தமிழர் என்ற சாதனைக்கும் பெருமைக்கும் இதன் மூலம் அகல்யா உரித்தானார்.

தேசிய மற்றும் பொதுநலவாய விளையாட்டு விழா உட்பட சர்வதேச பட்மின்டன் போட்டிகள் பலவற்றில் தொழில்நுட்ப அதிகாரியாக கடமையாற்றியுள்ள தனக்கு ஒலிம்பிக்கில் கடமையாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதைப் பெரும் பாக்கியமாக கருதுவதாக அகல்யாக குறிப்பிட்டார்.

ஆசிய பட்மின்டன் சம்மேளனத்தினால் 2012 இல் நடத்தப்பட்ட பட்மின்டன் மத்தியஸ்தர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான பரீட்சைக்கு தோற்றிய அகல்யா, இரண்டாவது அதிகூடிய



மதிப்பெண்களைப் பெற்று சித்தி அடைந்து ஏ தரச் சான்றிதழைப் பெற்றார்.

உள்ளக மற்றும் சர்வதேச போட்டிகள் பலவற்றில் மத்தியஸ்தராகவும் தொழில்நுட்ப அதிகாரியாகவும் கடமையாற்றிவந்த அகல்யா, சீனாவின் வுஹான் நகரில் 2017 இல் நடைபெற்ற ஆசிய பட்மின்டன் சம்பியன்ஷிப் போட்டியில் முதல் தடவையாக தொழில்நுட்ப அதிகாரியாக கடமையாற்றினார்.

பட்மின்டனுக்கு புகழ்பெற்ற மலேசியாவில் அதே ஆண்டு நடைபெற்ற ஆசிய அணிநிலை பட்மின்டன் போட்டிகளிலும் தொழில்நுட்ப அதிகாரியாக அவர் கடமையாற்றியிருந்தார்.

அவுஸ்திரேலியாவின் குவீன்ஸ்லாந்து, கோல்ட் கோஸ்ட் நகரில் 2018 இல் நடைபெற்ற 21ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் தொழில்நுட்ப அதிகாரியாகக் கடமையாற்றி வரலாற்றுச் சாதனை ஒன்றை நிலைநாட்டினார். அதனைத் தொடர்ந்து சீனாவின் குவாங்ஸூவில் 2019 இல் நடைபெற்ற எச்.எஸ்.பி.சி உலக பட்மின்டன் வேர்ல்ட் டுவர் போட்டியிலும் உலக பட்மின்டன் சம்மேளனத்தினால் நியமிக்கப்பட்டு தொழில்நுட்ப அதிகாரியாக அகல்யா பணியாற்றியிருந்தார்.

ஒரு வருடத்தால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ரோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிலும் பட்மின்டன் தொழில்நுட்ப அதிகாரியாக அகல்யா நியமிக்கப்பட்டுள்ளமையானது அவரது வாழ்க்கையில் பதிவான மிகப்பெரிய சாதனையாக அமைகின்றது.

# ஆர்தர் - சானக்கவுக்கு இடையே ஆடுகளத்தில் கடும் வாக்குவாதம்

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியின் பின்னர் இலங்கை அணியின் தலைமைப் பயிற் சியாளர் மிக்கி ஆர்தரும், அணித் தலைவர் தசுன் சானக் கவும் ஆடுகளத்தில் கடும் வாக்குவாதததில் ஈடுபட்டனர்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன் தினம் கொழும்பு ஆர் பிரேமதாச மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியானது ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை குவித்தது. பின்னர் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணியானது 49.1 ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியை தனதாக்கியது.

ஒரு கட்டத்தில் இந்திய அணி 193 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து பரிதாபகரமான நிலையில் இருக்க, வெற்றியின் வாய்ப்பு இலங்கைக்கு அதிகளவில் காணப்பட்டது.

அதன் பின்னர் எட்டாவது விக்கெட்டுக்காக தீபக் சாஹர் மற்றும் புவேனேஸ்வர் குமார் ஜோடி சேர்ந்து இலங்கையின் வெற்றிக் கனவை கலைத்தனர்.

இந் நிலையில் ஆட்டத்தின் முடிவுகளால் ஆத்திரமடைந்த மிக்கி ஆர்தர், போட்டியின் பின்னர் இலங்கை அணித் தலைவருடன் ஆடுகளத்தில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இருவரும் ஆடுகளத்தில் என்ன வாதத்தில் ஈடுபட்டார்கள் என்பது தெரியாத நிலையில், களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சாளர்களை பயன்படுத்திய விதம் குறித்து ஆர்தர், சானக்கவுடன் அதிருப்தியை பகிர்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அது மாத்திரமன்றி ஆட்ட நேரத்தின்போது இலங்கை அணியினரின் ஒவ்வொரு மிஸ் பீல்டிலும், தலைமை பயிற்சியாளர் விரக்தியடைந்த நிலையில் காணப்பட்டார்.

கசுன் ரஜித்த, லக்ஷான் சந்தகன் ஆகியோர் அதிகமான ஓட்டங்களை வாரி வழங்கிய நிலையில் அவர்களுக்கு தொடர்ச்சியான ஓவர்களை தசுன் சானக கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் குறைந்த ஓட்டங்களை வழங்கிய சமிக்க கருணாரத்ன மற்றும் தனஞ்சய டிசில்வா ஆகியோருக்கு தொடர்ச்சியாக பந்து வீசுவதற்கான வாய்ப்பை அணித் தலைவர் வழங்கவில்லை.

எவ்வாறாயினும் இந்த சம்பவத்தை சாடி தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள இலங்கை அணியின் முன்னாள் வீரரும், கிரிக்கெட் வர்ணனையாளருமான ரசல் ஆர்னோல்ட்,

பயிற்சியாளருக்கும், அணித் தலைவருக்கும் இடையிலான அந்த வாதம் ஆடுகளத்தில் நடத்திருக்க கூடாது. மாறாக அவர்களது ஆடை ஆறையில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.




# இரண்டாவது போட்டியிலும் இலங்கை அணிக்கு தோல்வி

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று ஒரு நாள் தொடரை 2 - 0 என கைப்பற்றியுள்ளது.

3 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடிவரும் இந்திய அணி முதல் ஒருநாள் போட்டியில வெற்றி பெற்று 1-0 என தொடரில் முன்னிலை பெற்றிருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன் தினம் பகலிரவு போட்டியாக இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் 50 ஓவர்களில் 276 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 49.1 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

இந்திய சார்பாக விளையாடி 2 விக்கெட்களையும் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட தீபக் சாஹர் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

ஹிஷாலினியின் மரணத்துக்கான

# குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கி நீதி நிலைநாட்டப்படவேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூலை 22**

**ஹிஷாலினியின் மரணம் தொடர்பான விசாரணைகள் எந்தவித தலையீடுகளும் இன்றி நேர்மையான முறையில் இடம்பெற வேண்டும் என்றும், குற்றவாளிகள் யாராக இருப்பினும் அவர்களை வெளிக்கொண்டுவர வேண்டும் என்றும், முறையான தண்டனை வழங்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வீட்டிலே பணிபுரிந்து, தீக்காயங்களுக்கு உட்பட்டு, கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் மரணமும் அதைத் தொடர்ந்து வெளிவருகின்ற தகவல்களும் முழு நாட்டு மக்களுக்கும் மிகவும் வேதனையை அளிக்கின்றதாக இருக்கின்றது.

ஈடுசெய்ய முடியாத இந்த இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் தெரிவித்து நிற்ப தோடு, அவர்களது துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

இந்தத் துயர் செயலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைகள் எந்தவித தலையீடுகளும் இன்றி நேர்மையான முறையில் இடம்பெற வேண்டும் என்றும், குற்றவாளிகள் யாராக இருப்பினும் அவர்களை வெளிக்கொண்டுவர வேண்டும் என்றும், முறையான தண்டனை வழங்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் இச்சிறுமியின் குடும்பத்தினர் மற்றும் நாட்டு மக்கள் சார்பாக நாம் வேண்டி நிற்கின்றோம்.

வறுமை மற்றும் குடும்ப சூழ்நிலையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாது சிறுவர்கள் பணிக்கமர்த்தப்படுவதும், பல்வேறு வகையான துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களுக்கு சிறார்கள் முகம் கொடுப்பதும் அண்மைய காலகட்டத்தில் மிகவும் அதிகரித்திருக்கின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு சிறுவர்கள் பாதுகாப்பு மற்றும் அவர்களது கல்வி உரிமைகள் தொடர்பான நாட்டின் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தபடுவதனை வலியுறுத்துகின்றோம்.

தொடர்ந்தும் எதிர்காலத்தில் இவ்விதமான அசம்பாவிதங்கள் இடம்பெறாது இருக்க அரசு மற்றும் அதி காரிகளோடு பொதுமக்களும் அவதானத்துடனும் பொறுப் புணர்வுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்" - என்றுள்ளது. (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 02 - 06 - 1986



உதிர்வு 19 - 07 - 2021

### புவனேந்திரன் அனோஜ்

சுவிஸ் Basel ஐப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புவனேந்திரன் அனோஜ் அவர்கள் 19.07.2021 திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் யாழ். புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லதம்பி – தங்கம்மா தம்பதிகள், புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் பொன்னாந்தோட்டத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை – தவநிதி (துவமணி) தம்பதிகளின் அன்புப் பேரனும், புவனேந்திரன் – சசிகலாதேவி (Basel) தம்பதிகளின் அருமைமகனும், புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தமுத்துலிங்கம், காலஞ்சென்ற மணிமேகலாதேவி(தேவி) தம்பதிகளின் அன்பு மருமகனும, மனோஜ்பிரியாஅவர்களின் ஆருயிர்க் கணவரும்,தேவின் (Devin) அவர்களின் அருமைத் தந்தையும்,அனாமிகா, அஜிதா ஆகியோரின் அருமைச் சகோதரரும், நடனலிங்கம், சற்குணராஜா (பாலன்), சிவலோகநிதி, சுசிகலாதேவி ஆகியோரின் பெறாமகனும், கிருஷ்ணராஜா (கிட்டி), சற்குணேஷ்வரி, சாரதாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், நேகா, சமிதா, றியானா, அங்கிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீப், பிரசாத், அருண் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 21 Jul 2021 3:00 PM - 4:30 PM
Thursday, 22 Jul 2021 12:00 PM - 4:30 PM
Friedhof am HörnliHörnliallee 70, 4125 Riehen, Switzerland
*கிரியை*
Monday, 26 Jul 2021 9:00 AM - 11:00 AM
Friedhof am HörnliHörnliallee 70, 4125 Riehen, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு: கோகிலன் (நண்பர்) 0041764701348*
*வீட்டுமுகவரி:*
Waldenburgerstrasse 21,
4052 Basel, Switzerland.

**தொடர்புகளுக்கு :**
**வீடு(குடும்பத்தினர்) 0041613127350**
**புவனேந்திரன் (தந்தை) 0041765157350**
**அனாமிகாபிரதீப் (சகோதரி)**
**0041764621610, 0041764641610**
**பிரசாத் (மைத்துனர்) 0041789082277**
**கிருஸ்ணா (மாமா) 0041786477815**
**மகாலிங்கம் (உறவினர்) 0041787960021**
**பாலன் (மாமா) 0033663001331**
**டெமி(நண்பர்) 0041764239149**
**கோகிலன் (நண்பர்) 0041764701348**

தகவல்
**குடும்பத்தினர்.**

# சிறுமியின் மரணத்துக்கு நீதி கிடைக்கும்வரை ஓயமாட்டோம்

## வேலுகுமார் எம்.பி. திட்டவட்டம்

*கண்டி, ஜூலை 22*

"சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ள மலையகச் சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டும். தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இவை நடைபெறும் வரை நீதிக்கான எமது போராட்டம் ஓயாது."

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் திட்டவட்டமாக அறிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

"நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் சிறுமியொருவர் சந்தேகத்துக்கிடமான உயிரிழந்துள்ள சம்பவமானது சமூகப் பிரச்னையாகும். அது சட்டம், ஒழுங்கு சார்ந்த பிரச்சினையும்கூட. எனவேதான் உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம்.

இந்நிலையில் எமது நடவடிக்கைகளுக்கு இனவாத சாயம் பூசி எம் மீது சேறுபூசுவதற்குச் சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். இந்த விவகாரம் இனங்களுக்கிடையிலான பிரச்னையோ அல்லது அரசியல் இலாபம் தேடுவதற்கான களமோ கிடையாது. நீதி நிவாரணத்தையும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்குமான பயணமாகும்.

ரிஷாத் பதியுதீனைப் பலிக்கடாவாக்குவதற்கோ அல்லது அவரைப் பாதுகாப்பதற்கோ எமக்கு எவ்வித தேவைப்பாடும் கிடையாது.

அதேவேளை, இது போன்ற சம்பவங்கள் இனியும் நடக்க கூடாது. சிறார்களின் கல்வி பெறும் உரிமை பாதுகாக்கப் படவேண்டும். அந்தவகையில் இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு அதற்கான விழிப் புணர்வு திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிறுமியின் மரணத்தை வைத்துகூட ஆளுந்தரப்பே இன்று அரசியல் நடத்திக்கொண்டிருக்கின்றது. பொலிஸ் துறை உட்பட சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கான கட்டமைப்பு அரச வசமே இருக் கின்றது. அதனைச் செயல்படுத்துவதை விடுத்து வலியும் அரசியல் சுகம் காண்பதற்கு ஆளுந் தரப்பு முற்படுகின்றது. இதுவும் பெரும் அநீதியாகும்" - என்றார். (இ)

# புவனா அம்மா மறைவு குருகுலத்தில் கல்வி கற்ற அனைவருக்கும் பேரிழப்பு

## இந்து குருமார் அமைப்பு இரங்கல்

*யாழ்ப்பாணம், ஜூலை 22*

இணுவில் தர்மதாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீதாணு மகாதேவ குருக்களின் துணைவியார் ஸ்ரீமதி புவனா அம்மாவின் மறைவுக்கு இந்து குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க.வைத்தீஸ்வர குருக்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

அறம் எனப்படுவது மறவாது மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் வழங்குதல் எனும் வாசகத்துக்கு அமைய அறநெறி வழுவாது உணவு வழங்கும் தர்ம நெறியில் சிறிதும் பிசகாது குருகுல அதிபர் அண்ணாவின் இனிய தர்மபத்தினியாகவும் பிள்ளைகளுக்கு ஏற்ற தாயாகவும் குருகுலத்திற்கு வரும் அத்தனை மாணவர்களுக்கும் மிகச்சிறந்த அன்னபூரணி தாயாகவும் விளங்கி வாழ்வாங்கு வாழ்ந்த தாயார் புவனா அம்மாவை இழந்து நிற்கின்றோம் என்பது தாங்கொணாத துயரமே .

அம்மாவின் இழப்பு குடும்பத்தவர், உற்றார், உறவினர் மட்டுமன்றி குருகுலத்தில் கல்வி கற்ற அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி எனும் குறள் நெறிக்கமைய செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்



பார்த்திருந்த சமயநெறி வாழ்வின் இலக்கணமாக வாழ்ந்தவர் போற்றுதலுக்குரிய ஸ்ரீமதி புவனா அம்மையார்.

அவரின் ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளை வேண்டி இந்து குருமார் அமைப்பின் சார்பில் பிரார்த்தனை செய்து கொள்வதுடன் துயரில் பங்கேற்று உற்றார் உறவினருக்கும் ஆறுதலை பகிர்ந்துகொள்கின்றோம் - என்றுள்ளது. (இ)

## நடைமுறைப்படுத்த...

மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா என ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. மனித உரிமைகள் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்தல், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் இதுபோன்ற கடுமையான குற்றங்கள் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அல்லது குழுக்களினால் வெளிக்கொண்டு வரப்பட்ட விடயங்கள் குறித்து விசாரணை செய்தல், அறிக்கையிடல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, ஜனவரி மாதம் 21ஆம் திகதி மற்றும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதிகளில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம், இந்த ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸை தலைவராகக் கொண்ட இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக, ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி மற்று யாழ்ப்பாண முன்னாள் மேயர் யோகேஷ்வரி பற்குணராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் உடன்படாத ஆணைக்குழு, பிரித்தானியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காக அறிமுகப்படுத்தியுள்ள சட்டங்களை ஆராய்ந்து, இச்சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை, இவ்விடைக்கால அறிக்கையின் ஊடாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 9, 11 மற்றும் 13ஆம் பிரிவுகள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ள ஆணைக்குழு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை கூடிய ஜனநாயக முறையில் அமுல்படுத்துவது தொடர்பான மூன்று முன்மொழிவுகளை, இடைக்கால அறிக்கை ஊடாக முன்வைத்துள்ளது.

இச்சட்டத்தின் 9ஆவது பிரிவின் ஊடாகத் தடுத்து வைத்தல் நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது, குறைந்தது மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் மீது குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்து வழக்குகளை விசாரணை செய்து முடிப்பது குறித்தும் 11ஆவது பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைப்பதற்குப் பதிலாக, விசேட பாதுகாப்பின் கீழ் அவர்களின் சொந்த வீடுகளிலோ அல்லது கிராமங்களிலோ தடுத்து வைக்கப்படுவதற்கான வாய்ப்பையும் சுட்டிக்காட்டியுள்ளது.

13ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்காக, குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட, அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஆலோசனைச் சபையை நியமிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும், ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையின் ஊடாக முன்மொழிந்துள்ளது.

நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வெற்றிகொள்ளும் வகையில், பொறுப்புக்கூறல் மற்றும் மனித வள அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் முகவர் நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் செயற்படுவது அரசாங்கத்தின் கொள்கையாகும். தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளை ஜனநாயக மற்றும் சட்ட செயன்முறைக்குள் தீர்ப்பதற்கும் தேவையான நிறுவனச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கும், அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை, அடுத்த ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதற்கும் முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்வதற்கும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் டி.டி. உப்புல்மலி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொழும்பகே மற்றும் ஜனாதிபதியின் சட்டத்துறைப் பணிப்பாளர் நாயகம் உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹனதீர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## அடங்க மறுக்கும்...

மக்கள் அனைவரும் சுகாதார விதிகளை உரியவாறு கடைப்பிடித்து தத்தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த அபாய நிலைமையால் நாட்டில் அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு மறு அறிவித்தல் வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையே போக்குவரத்துகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது தொடர்பாக இதுவரையில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் இராணுவத் தளபதி கூறினார்.

நாடு முழுவதும் மே 21 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடு ஜூன் 21 ஆம் திகதியுடன் தளர்த்தப்பட்ட போதும் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையைத் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 14 ஆம் திகதி முதல் மாகாணங்களுக்கு இடையே பொதுப் போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலையில், பின்னர் அந்தத் தீர்மானம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

நாட்டில் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருப்பதால் மாகாணங்களுக்கு இடையே பொதுப் போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்க கொரோனாத் தடுப்புச் செயலணி அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை, தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்தும் அமுலில் வைத்திருப்பதற்கே தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார். (இ)

## தொடரும்...

கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த 47 மரணங்களும் நேற்று முன்தினம் (ஜூலை-20) பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் 21 பேர் மற்றும் ஆண்கள் 26 பேரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3900 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு எதிராக...

மாறு வலியுறுத்தியும், அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறும் கோரியும், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்துமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் அதிபர், ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியவாறு கோஷமிட்டவாறு இரத்தினபுரி நகரில் ஊர்வலமாகச் சென்று இரத்தினபுரி மணிக்கூட்டு கோபுரத்தின் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக இரத்தினபுரி நகரில் இரு மணிநேரம் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. (இ)

# ரிஷாத் வீட்டார் சிறையில் அடைக்கப்பட வேண்டும்!

### பௌத்த கேந்திர நிலையம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 22

"மலையகச் சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டார் சிறையில் அடைக்கப்பட வேண்டும்."

- இவ்வாறு பௌத்த கேந்திர நிலையத்தின் நிர்வாகப் பணிப்பாளர் அங்குணுகல்லேசில் ஜிங்கானந்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது வரையில் நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவாகின்றன. இது பாரிய அச்சுறுத்தல் நிலைமையாக மாறியுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் தொழில் புரிந்த தமிழ் சிறுமியை வீட்டில் வேலைக்கு அமர்த்தியமை மற்றும் தொடர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தவறான செயற்பாடாகும்.

இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறிய போதிலும் சிறுமி தீக்காயங்களுக்குள்ளாகிய சம்பவம் ரிஷாத்தினுடைய வீட்டிலேயே இடம்பெற்றுள்ளது.

ஆகவே, அந்த வீட்டில் வசிப்பவர்களைச் சிறுமியின் மரணம் தொடர்பில் கைதுசெய்வது அவசியமாகின்றது.

பாதையில் நாம் செல்லும்போது விபத்தொன்று நேர்ந்தால் பிழையோ சரியோ, பாதிக்கப்பட்ட நபர் காயங்களுக்குள்ளாகியிருப்பவர் சரியாகும் வரை விபத்துக்குக் காரணமான நபர் சிறையிலிருக்க நேரிடும். அவ்வாறாக குறித்த சிறுமியை இத்தகைய நிலைமைக்கு உட்படுத்தியவர் யார்? உயிரிழப்புக்கான காரணம் என்ன? துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியோர் யார்? என்பவை தொடர்பில் கண்டறியும் வரை ரிஷாத்தின் வீட்டார் சிறையில் அடைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது" - என்றார். (இ)

## 20 இலட்சம்...

என. அதன்படி, குறித்த தடுப்பூசிகள் இன்று வியாழக்கிழமை அதிகாலை நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகளே இவ்வாறு கொண்டுவரப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## 2032 ஒலிம்பிக்...

போர்ன் மற்றும் 2000 ஆம் ஆண்டில் சிட்னி என அவுஸ்ரேலியா ஏற்கனவே இரண்டு முறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியுள்ளது.

## யாழ். வரும்...

01 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணத்துக்கான இரண்டு நாள் பயணத்தை மேற்கொள்ளவுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாவற்குழி ரஜமகா விஹாரயின் கோபுரத்தைத் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற 182 வீடுகளுக்கான உரிமங்களை பயனாளர்களுக்கு வழங்கவுள்ளதுடன், 34 புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் பங்குபற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, காங்கேசன்துறைக்குச் செல்லவுள்ள பிரதமர், காங்கேசன்துறை திஸ்ஸ மஹா விகாரையின் பிக்குமாருக்கான விடுதித் திறப்பு மற்றும் குறைந்த வருமானம் கொண்ட இரண்டு குடும்பங்களுக்கான வீடுகளையும் கையளிக்கவுள்ளார்.

பின்னர், வேலணைக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள பிரதமர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய நூறு நகரத் திட்டத்தின் இரண்டாம் கட்ட தேசிய நிகழ்வை வேலணையில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கந்தசாமி கோயில் மற்றும் நயினாதீவு நாகவிகாரை ஆகியவற்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மத வழிபாடுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

பின்னர், நயினாதீவு மக்களுக்கான நீர் வழங்கல் திட்டம், யாழ். நகர நீர் சுத்திகரிப்பு பணிகள் ஆகியவற்றையும் ஆரம்பித்து வைக்கவுள்ள பிரதமர், தாளையடி நீர்த் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்திலும் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார். (இ - 03)

## நான்காவது...

பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க சரிவு ஏதும் இல்லை எனவும் இலங்கை மருத்துவர் சங்கம் கூறியிருந்தது.

இந்த கருத்துக்களுக்கு பதிலளித்த சுகாதார மேம்பாட்டு பணியக இயக்குநர் வைத்தியர் ரஞ்சித் படுவந்துதாவா, தற்போது நாடு மூன்றாவது அலைகளின் இறுதிக் கட்டத்தில் உள்ளது என தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையைப் பார்த்து அதை விளக்கும் வெவ்வேறு கண்ணோட்டங்கள் இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும் தொற்றுநோயியல் பிரிவில் உள்ள தரவு மற்றும் புள்ளி விவரங்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## யாழ். மாவட்ட...

கடந்த திங்கட்கிழமை பதவியேற்ற மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு நேற்று யாழ். மாவட்ட செயலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு மாவட்ட அரச அதிபருடன் மரியாதை நிமிர்த்தமான சந்திப்பை மேற்கொண்டார்.

சந்திப்பின் பின் இராணுவத் தளபதியால் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு நினைவுப் பரிசில் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர்களான ம.பிரதீபன், சு.முரளிதரன் (காணி) மற்றும் இராணுவத்தின் பலாலி இராணுவக் கட்டளை தலைமையக உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது தற்போதைய கொரோனா நிலைமைகள், யாழ். மாவட்ட அபவிருத்தி நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. (இ - 03)

## கிளிநொச்சி...

யில் 05 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்று 150 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 02 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பு தெரிவித்தது.

இந்த நிலையில் சேவைச் சந்தையை திறந்து விடுவது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையினர் சுகாதார தரப்புடன் பேசி வருகின்றனர்.

சேவைச் சந்தையில் சேவை பெறுவோர் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு சுகாதாரத் தரப்பினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் சேவைச் சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# ஒட்டுமொத்த மக்களும் அரசுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 22

**“இராணுவ மயமாக்கலை தீவிரப்படுத்தும் அரசு தனது கொள் கையை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் ஒட்டு மொத்த மக்களும் அரசுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு எச்சரித்த அவர் மேலும் பேசுகையில்,

“எரிபொருள் விலை அதிகரிப் புக்கு வலுசக்தி அமைச்சர் தனிப் பட்ட ரீதியில் பொறுப்புக்கூற வேண்டியவர் அல்லர். ஒட்டு மொத்த அரசும் இதற்குக் காரணம். வலுசக்தி என்பது அபிவிருத்திக்கு மிக முக்கியமானது. இன்று நாடு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு இந்தச் சபையில் உள்ள சகலரும் பொறுப்புக்கூற வேண் டும். இதுவரை காலமாக முறை யான கொள்கைத்திட்டம் ஒன்று இல்லாது அரசுகள் செயல்பட்ட மையே இதற்குக் காரணம்.

நாட்டின் வரவு - செலவுத் திட் டத்தில் தேசிய பாதுகாப்புக்கு 10.3 வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்றால் யார் உங்களின் எதிரிகள் என்பதை நீங்க கூற வேண்டும்? இலங்கைக்கு எதிராக எந்தவொரு நாடும் போர் களைத் தொடுக்கவில்லை. அப்படி இருந்தும் இந்த நாட்டில் ஒரு இனக் குழுவுக்கு எதிராகவே நீங்கள் பாது காப்பைப் பலப்படுத்தியுள்ளீர்கள். இந்த நாட்டின் பிரஜைகளையே நீங்கள் எதிரிகளாக நினைத்துள்ளீர் கள். ஏனென்றால் அவர்களின் அடிப் படை உரிமைகளை வழங்கவோ அவர்களை அங்கீகரிக்கவோ நீங்கள் தயாராக இல்லை. இதுதான் அவர்க ளுக்கு எதிராகப் போரைத் தொடுக் கவும், அவர்களை கொன்று குவிக்க வும் காரணமாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகவே அரசின் பாதுகாப்புக் கொள்கை கையாளப்பட்டது. 32 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை கையாளப் பட்டது.

அன்று தமிழர்கள் போன்று இன்று முஸ்லிம்கள் இலக்கு வைக் கப்பட்டுள்ளனர். ஏனென்றால் உங் களின் ஊழல்வாத அரசைக் கொண்டு செல்ல இவ்வாறான அடக்கு முறைகளைக் கையாண்டு வருகின் றீர்கள். இராணுவ ஆக்கிர மிப்புக் குள் நாடு தள்ளப்பட்டு வருகின்றது.

சிங்கள மக்களைத் திருப்திப்ப டுத்தி அவர்கள் உங்களைக் காப்பற் றுவார்கள் என்ற காரணத்துக்காகச் சிறுபான்மை மக்களை அடக்கு முறைக்குள் உட்படுத்த நினைக்கின் றீர்கள். நீங்கள் எமது குரலுக்கு செவிமடுக்க மறுக்கின்றீர்கள்.

இன்று அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரே ரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு எந்த நன்மை யும் இல்லை. அவர்களின் வாழ்வா தாரப் பிரச்னைக்கு இது தீர்வு அல்ல. தமிழ் மக்கள் 73 ஆண்டுக ளாக நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். இன்று முஸ்லிம்களும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இன்று ஒட்டுமொத்த நாடும் நெருக்கடிக் குள் தள்ளப்பட்டுள்ளது. அரசு தனது கொள்கையை மாற்றிக் கொண்டு பயணிக்கவில்லை என் றால் அரசுக்கு எதிராக மக்கள் வீதி யில் இறங்குவர்” - என்றார். (இ)

# இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி சகலரும் ஒன்றாகப் பயணிப்போம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அறைகூவல்



கொழும்பு, ஜூலை 22

தேசிய இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு அனைவரும் ஒன்றாக பயணிப்பதன் மூலமே பிரச்னைக ளில் இருந்து நாட்டை மேலெழுப்ப முடியும் என்று முன் னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை வருமான மைத்திரிபால சிறிசேன எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“உதய கம்மன்பிலவை அமைச்சர் பதவியில் இருந்து விலக்கும் அளவுக்கு எரிபொருள் விலை அதிக ரிக்கப்பட்டமை தவறாகக் கூற முடியாது. எந்தவொரு அரசும் தானே விரும்பி அதனை அதிகரிப்பதில்லை.

காலத்துக்குக் காலம் அரசுகள் மாறினாலும் நிலையான தேசிய கொள்கையொன்றை உருவாக்கிக் கொள்ளும் இணக்கப் பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாறாக அமைச்சுப் பதவிமாறினா லும் கொள்கையை மாற்றிக் கொள்ளும் நிலை இனியும் தொடரக்கூடாது.

பொருளாதார நெருக் கடியின் அடிப்படையில் நாடு இன்று பல பிரச் னைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றது. கடந்த 40 ஆண்டுகால அரசுகளின் பலவீன செயல்பாடுகளின் விளை வுகளே இன்றைய பொரு ளாதார நெருக்கடிக்குக் காரணம்.

இந்தப் பிரச்னைகளுக் கான தீர்வுகளைப் பெற் றுக்கொள்ளும் வேளையில் கடந்த கால பலவீனமான செயல்பாடுகளைக் கருத் தில்கொள்ள வேண்டும்.

அரச வங்கிகளில் அரசு கடன்களைப் பெற்றுக் கொள்வது குறித்தும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது. அரச வங்கிகளில் கடன் வாங்காத அரசு எதுவென தேடிப்பிடிக்க முடி யாது.

அரச வங்கிகளில் கடன்களைப் பெறுவது அல்லது சர்வதேச கடன்களைப் பெற்றுக்கொள்வதை சகல அரசுகளும் கையாண்டுள்ளன. எமது அரசிலும் அத னைச் செய்துள்ளோம்” - என்றார். (இ)






## ஸ்வர்க்க லோக பிரார்த்தனை அஞ்சலி



மலர்வு 16 - 07 - 1944

உதிர்வு 21 - 07 - 2021

எனது குரு சிவஸ்ரீ ஸ்ரீ வத்சாங்க குருக்களின் அன்புத் தாயாரும் எங்கள் குருவின் குரு, ஸ்ரீ தர்மசாஸ்தா குருகுலத்தின் (ஸ்ரீ காயத்திரி பீடம்) அதிபர் சிவஸ்ரீ தாணு, மகாதேவக் குருக்களின் அருமைத் துணைவியாருமாகிய

அமரர் **ஸ்ரீமதி புவனாம்பிகை அம்மா மகாதேவக்குருக்கள்**

அவர்களுக்கு எமது ஆத்மார்த்த அஞ்சலிகளை சமர்ப்பித்து ஸ்வர்க்க லோக பிராப்தம் அடைய எல்லாம் வல்ல ஆடல் வல்லானைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக் குழு,
மூளாய்

தங்க முகுந்தன் குடும்பம்
(குருஸ்வாமி)

## மரண அறிவித்தல்



மலர்வு 04 - 02 - 1938

உதிர்வு 21 - 07 - 2021

### முத்தையா மரியநாயகம்

*(இராசு சம்மாட்டி)*

யாழ். பொற்பதி குடத்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மரியநாயகம் 21-07-2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா – இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆர்திகேசு– மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வத்துரை, கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்பு பெறா மகனும்,சிசிலியா மரியநாயகம் அவர்களின் அன்புக் கணவரும்,இராஜரட்ணம்(கொலண்ட்), அன்ரனி (கனடா), இராஜேஸ்வரி(லூசியா– கொலண்ட்), இருதயநாயகி(இலங்கை), சிலோசினா(இத்தாலி) ஆகி யோரின் அன்புத் தந்தையும்,சிறிஸ்கந்தராஜா, ஜசிந்தா, சவுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான லூசியா, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அந்தோணிப்பிள்ளை, செல்வராஜா, பாக்கியவதி, ஜேசு மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கலையரசி, றூ பி, சிறிபாலன், ஞானசெல்வம், றணீஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும்,தர்கிகா– ஐசன், நிரோஜன்– ஜானு, நிக்ஷசன்– சியா, நிலோஜன், கௌஷிகா, அஸ்வின், அனுறின், அபிஷன், டெனிஷசன், ஜேசோன், ஞான நியூட்சன், ஞான வியுட்சன், சபறீனா, சிமோன், சாமுவேல் ஆகியோரின் அன்புப் பேரனும்,அகுல், அஹான் ஆகி யோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் திருப்பலி 22.07.2021 வியாழக்கிழமை மு.ப. 08:00 மணியளவில் புனித இராயப்பர் தேவால யத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தொடர்புகளுக்கு :
அன்ரனி - மகன்
+14165666027

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் :
உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மாரி,மாஸ்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - வாழ்




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம்
பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,
விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்